
# தளிர்

ஆவணி; 1985

விலை ரூபா: 4.00



உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்போம்!

நண்பரின் அன்பளிப்பு

# தளிர்


திரள்: 3 இல; 5

ஆவணி; 1985

விலை ரூபா: 4.00


## உள்ளே


- வெகுஜனப் போராட்டம்.
- தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் ஒடுககுமுறைகளில் நிலச்சூறையாடல்.
- தோட்டத் தொழிலாளரைப் பற்றிய பொய்மைகளும், உண்மைகளும்.
- தென்னாசிய சூழ்நிலையில் தமிழீழப் போராட்டமும் சோஷலிஸத்திற்கான பாதையும்.
- தேசமெனும் தகமை ஓர் மார்க்சியப் பார்வை.
- நவகாலனித்துவம் — 2
- சீக்கியர் பிரச்சினையும் இந்திரா காங்கிரஸும்.
- ★ கலை, இலக்கியத்தின் கடமை.


## தொடர்புகட்கு


''தளிர்''

ஆசிரியர் குழு

யாழ். பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம்.


## வாசகர்களுக்கு!

''தளிர்'' பற்றியும், உள்நாட்டு-வெளிநாட்டு அரசியல்-பொருளாதார-சமூக நிலைமைகள் பற்றியும் உங்கள் ஆக்கங்களை வரவேற்கின்றோம்.

## ஒருவன் எல்லோருக்குமாக! எல்லோரும் மனிதத்திற்காக!!

மனித நேயமே நாம் ஆயுதம் ஏந்துவதற்கு காரணமாகும். ஆம்! மக்கள் இதுவரைகாலம் அனுபவித்த, அனுபவித்து வருகின்ற துன்பமான, துயரமான வாழ்க்கையிலிருந்து அவர்களை விடுவித்து; அவர்களுக்கு புதுவாழ்வு அளிக்கவே நாம் ஆயுதம் ஏந்தினோம்.

இந்த மண்ணிலே புதுவாழ்வை-புதிய சமுதாயத்தை நிர்மாணிக்க வேண்டுமானால் அது ஒரு சிலரால் மட்டும் முடியாத காரியமே. அதை மக்கள் மத்தியிலே, மக்களின் முயற்சியில் நம்பிக்கை வைத்துத் தான் நிர்மாணிக்க வேண்டும். இந்த இலக்கின் முதற்படியே மக்களுக்கு கல்வி ஊட்டுதலாகும்.

மக்களுக்கு கல்வியூட்டி அவர்களை புதிய மனிதராக்குவதென்பது இலகுவான காரியமல்ல. இருந்தாலும், எமது உயர்வான இலக்கினை அடைவதற்கு அதைச் செய்துதான் ஆகவேண்டும். இவ்வுலகில் மிக, மிக மதிப்புள்ளவன் மனிதனே! எனவே நாங்கள் ஒவ்வொருவரும், மற்றைய மனிதர்களை நேசிக்கப் பழக வேண்டும். மக்களை நேசித்து, அவர்களில் நம்பிக்கை கொண்டு, அவர்கள் மத்தியிலே வாழ்ந்து, அவர்களின் இன்ப, துன்பங்களில் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும். நாங்கள் ஒவ்வொருவரும் மக்கள் மத்தியிலே சென்று, மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக நடந்து காட்டி, அவர்களை விழிப்படையச் செய்யவேண்டும். எந்த ஜனநாயகத்திற்காக மக்களிடம் செல்கின்றோமோ, அந்த ஜனநாயகத்தைக் கொண்டவர்களாய் நாம் மக்களிடம் செல்ல வேண்டும்.

நாங்கள் எல்லோரும் புரட்சிகரமான கருத்துக்களை தாங்கிக்கொண்டு, எதிரிக்கெதிரான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். ஆம்! ஒரு புரட்சிகரப் படை வெற்றியடைவதற்கு ஒழுங்கான, கூட்டுறவான, பண்பட்ட வாழ்க்கை முறையைக் கற்றுக்கொண்டு தன்னைத்தானே கருத்து ரீதியாக தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.

'ஒருவன் எல்லோருக்குமாக, எல்லோரும் மனிதத்திற்காக'' என்பதற்கிணங்க நாம் ஒவ்வொருவரும் ஒரு கையில் துப்பாக்கியும், மறுகையில் கத்தியும், அரிவாளுமாய் நின்று புதிய சமுதாயத்தை உருவாக்கப் போராடுவோம்!

## எம்மைத் தெரிகிறதா?
## எங்கள் குரல் கேட்கிறதா?

வெலிக்கடையில், தங்காலையில், பூஸாவில், நீர்கொழும்பில்
கோட்டையில் உள்ள நூற்றுக்கணக்கான இருண்ட சிறைக் கூடங்களுக்குள்
நம்பிக்கையின் கடைசிக் கிரணத்தில்
மட்டுமே உயிரைத் தாங்கி வைத்திருக்கிற அவல நிலையில் இருக்கும்
எங்கள் குரல் கேட்கிறதா?

இந்தக் கோடைகாலத்தின் இறுதிப்பகுதியில் உயர்ந்துள்ள வெப்பத்தில்,
திருவிழாச் சந்தடியில் , போர் நிறுத்தம் என்ற மாயையில்
எங்களை, எங்கள் பெயர்களை, எங்கள் குரல்களை மறந்து
விடுவீர்கள் என்று அஞ்சுகிறோம்?

தலைகீழாகத் தொங்கவிடப்பட்டு கீழே நெருப்பு மூட்டப்பட்ட போதும்,
நகம் பிடுங்கிய ரணங்களின் மீது மிளகாய்த் தூள் இடப்பட்ட போதும்,
பாம்புகளை வாய்க்குள் செலுத்திய போதும்
'என் தேசமே!' என்றுதான் எம்மில் சிலர் அழுததை சிறையின்
உலர்ந்த கற்சுவர்கள் எப்படி உறிஞ்சியிருக்க முடியும்.

வதை கூட அறைச்சுவரில் சிதறிய குருதித் துளிகளுக்கும்
நினைவு திரும்பாமலே மரித்துப்போன எங்கள் பக்கத்து அறைத் தோழர்களுக்கும்,
உங்களுக்குச் சொல்வதற்கென்று ஆயிரம் கனவுகளை
நெஞ்சில் தாங்கி, அந்தக் கனவுகளுடனேயே
அநாதைகள் போல எங்கோ ஒருபெயர் தெரியாத காட்டிற்குள்
புதைக்கப்பட்டு விட்ட நண்பர்களுக்கும், இவை தொடர்கதை தான் என்பதை
எப்படிச் சொல்லப் போகிறீர்கள்?

'நமக்கென்ன என்று இட்டு, உண்டு இரும்!' என்று பழைய
தமிழில் ஔவை சொன்னதை எப்படி நீங்கள் திருப்பிச் சொல்ல முடியும்?
எமது துயரமும், எமது துன்பங்களும் உண்மையான மனித விடுதலைக்காக
உழைத்தமையின் பரிசுதான் என்றால் அவை
மகிழ்வுதான் தருவன. இந்தச் சிறைகூட வதை அறைகளுக்குள்
எழும் எமது அவலக்குரல்களில் தான் உண்மையான மனித நேயத்தின்
அவசியத்தை உணர்கிறோம்.
மிருகங்களுககு மத்தியில் இருக்கிற போதே மனிதத்தின் அருமை
எமக்குத் தெரிகிறது.

அன்புள்ள மக்களே,
அன்புள்ள நண்பர்களே,
அன்பான தேசமே
உயர்த்தி அடைத்த இரும்பு வேலியுள் இருந்து எழுகிற
எமது குரல்கள் உங்களைக் கேட்பதெல்லாம்
ஒன்றே ஒன்றுதான்-
போரிடுங்கள்-
அநீதிகளுக்கு எதிராக,
போரிடுங்கள்-
அடக்குமுறைகளுக்கு எதிராக,
போரிடுங்கள்-
மனித நேயத்திற்காக.
மணல்துகளை காற்று அடித்துச் செல்வதைப்போல
காலமும், காலனும் எங்களைக் கொண்டுபோய் தீர்ப்பதை
தடுத்து நிறுத்துங்கள்! உலகத்தின் மனச்சாட்சியின்
மெல்லிய நரம்புகள் மீது எமது அவலத்தையும், துயரத்தையும்
அதிர வைப்பதற்கு நாங்கள் உயர்த்தும் குரல்களுக்குத்
துணை கொடுங்கள்!
உயரும் கரங்களுடன் அணி திரளுங்கள்!

**வெகுஜனப் போராட்டங்கள் இல்லாவிடில் ஆயுதங்கள் மக்களிடமிருந்து அந்நியப்பட்டுவிடும்; வெகுஜனப் போராட்டங்கள் இல்லாமல் ஆயுதப் போராட்டம் உயிர்வாழ முடியாது.**

**பல்வேறு** போராட்ட அம்சங்களுள் ஓரம்சமே ஆயுதப் போராட்டமாகும். மற்றைய போராட்ட அம்சங்கள் அனைத்துடனும் இணையாமல் ஆயுதப் போராட்டமென்னும் ஓரம்சம் மட்டும் தனித்து நின்று உயிர்வாழமுடியாது. விண்ணப்பங்கள், கோரிக்கைகள், வெகுஜனப் போராட்டங்கள் என்பனவற்றின் மூலமாகப் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாதென்ற நிலை ஏற்படவே அவற்றுடன் தவிர்க்கமுடியாதவாறு இன்னுமோர் புதிய அம்சமாக இணைவதே ஆயுதப் போராட்டமாகும். முரண்பாடுகள் வெகுஜனப் போராட்ட முறைகளாற் தீர்க்கப்பட முடியாத நிலையை அடையவே அந்த வெகுஜனப் போராட்ட முறைகளுள் இருந்து இயல்பாகவே ஆயுதப் போராட்டம் பிறக்கின்றது. அவ்வாறு பிறக்கும் ஆயுதப் போராட்டம் வெகுஜனப் போராட்டங்களின் அரவணைப்பில்லாமல் வளரமுடியாது.

வெகுஜனப் போராட்டங்களை நடாத்தாமல், வெகுஜனப் போராட்டங்களுக்கூடாக மக்களை அழைத்துச் செல்லாமல் மக்களை அரசியல்மயப்படுத்த முடியாது. மக்களின் பங்கையும் பாத்திரத்தையும் சரிவர உணரவைக்க முடியாது. வெகுஜனப் போராட்டங்களில் மக்கள் கலந்து கொள்வதன் மூலம் அவர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து கொள்வார்கள்; தங்கள் பங்கை வகிக்க முன்வருவார்கள். இந்தக் கட்டங்களில்தான் மக்களை சரியான வழியில் அரசியல்மயப்படுத்த முடியும். தமது சகல பிரச்சினைகளையும் அரசியலாகவே பார்க்க முற்படுவார்கள். அதன் மூலம் அரசியலாகவே அப்பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்ற நம்பிக்கை கொள்வார்கள். அரசியல் ரீதியாகத் தம்மை ஸ்தாபனப்படுத்துவதன் மூலம்தான் தமது சகல பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான அடிப்படை வலுவைப் பெறலாம் என்பதை உணர்ந்து கொள்வார்கள். வெகுஜனப் போராட்டங்கள் மூலமாக மக்கள் அரசியல் அறிவைப் பெறுவார்கள். அந்த வேளையில் பல்வேறு அரசியற் சிந்தனைகளையும் முன்வைக்கலாம். மக்களின் அபிலாசைகளும், உணர்வுகளும் வெளிப்படும். சமூகக் கூட்டுத்தன்மை பிறக்கும்.

'இயற்கையின் மீது மனிதன் செயற்படுவதன் மூலமாகவே அவன் இயற்கையையும் மாற்றிக்கொள்கிறான், தன்னையும் மாற்றிக் கொள்கிறான்' என்ற கருத்தைக் கிரகிப்பதன் மூலம் பின்வரும் ஓர் முடிவுக்கு வரலாம். அதவாது இயக்கங்கள் மக்கள் மத்தியிற் தொழிற்படுவதன் மூலமே மக்களையும் மாற்றித் தன்னையும் மாற்றிக்கொள்ளலாம். மக்கள் மத்தியிற் செயற்படாமல் மக்களை மாற்றமுடியாது, மக்கள் மத்தியிற் செயற்படாமல் தன்னையும் மாற்ற முடியாது. இந்த வகையில் மக்கள் மத்தியிற் ஸ்தாபனங்கள் செயற்படுவதற்கான தக்கவாய்ப்பைத் தரவல்ல சாதனங்களுள் வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் மக்களையும் பண்படுத்தலாம்; முன்னெடுப்பவர்கள் தாமும் பண்படலாம். முன்கூட்டியே பண்பட்டவர்களாக, வானத்திலிருந்து பூமிக்குத் திடீரெனக் குதித்த புனிதர்களாகப் பூமியில் ஒருவருமில்லை. எனவே போராட்டத்தில் ஈடுபடுவதன்மூலமாக ஒரு சுய பண்படுத்தலை ஸ்தாபனம் அடையலாம். அந்தவகையில் ஸ்தாபனங்கள் தம்மைச் சுயபண்படுத்தல் செய்ய வெகுஜனப் போராட்டங்கள் உதவிபுரியும்.

எதிரியின் ஒடுக்குமுறை வடிவங்களை யும், கொடுமைகளையும் வெளியுலகிற்கு வெளிப்படுத்துவதற்கும், எமது துயரங்களை யும், தேவைகளையும், அபிலாசைகளையும் பிரபல்யப்படுத்துவற்கும் வெகுஜனப் போ ராட்டங்கள் ஓர் சிறந்த வழியாகும். இந்த வகையில் தற்போது நிகழும் உண்ணாவிர தப போராட்டம் சிறைச்சாலைக்குள் நடாத் தப்படும் எதிரியின் கொடூரத்தை வெளியு லகிற்கு அறியவைக்க உதவும். எதிரி தான் விதித்த கொடூரமான பயங்கரவாதத்த டைச் சட்டவரம்பைக் கூடக் கடந்து எமது சகோதரர்களைத் தொடர்ந்து வதைமுகாம் களில் வைத்திருக்கும் கொடுமையை வெ ளிப்படுத்தவும் எமது நியாயங்களை வெளி யுலகம் உணர்ந்து கொள்ளவும் இந்த உண் ணாவிரதப் போராட்டம் உதவி புரியும். இவ்வாறு எதிரியின் கொடுமைகள் ஒவ் வொன்றும் துல்லியமான உதாரணங்களின் மூலமும் தொடர்ச்சியாக வெளிப்படுத்தப் படும்போதுதான் எமது போராட்டத்திற் கான உலகளாவிய ஆதரவைப் பெறுவதற் கான வாய்ப்புக்கள் வளர்ச்சியடையும்.

இத்தகைய போராட்டங்கள் மூலமாக மக்கள் எதிரியின்மீது சினமும், வெறுப்பும், ஆக்கிரோசமும் அடைவார்கள். இவற்றின் நிமித்தம் மேலும் மேலும் ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்து ஆத ரவளிப்பார்கள். சில இயக்கங்களின் கண் மூடித்தனமான நடவடிக்கைகளின் மத்தி யில் இத்தகைய வெகுஜனப் போராட்டங்க ளும் இல்லையென்றால் இந்தச் சூழலில் போராட்டம் கூடமக்களிடமிருந்து முழு மையாக அந்நியப்பட்டுவிடும். இறுதியா கத் தமது கோரிக்கையிலிருந்தே மக்கள் தம்மை அந்நியப்படுத்த நேரும். அன்றாட மாகப் போராட்டத்தில் ஈடுபடுவதன் மூல மாகச் சகோதரத்துவம் மேலோங்கும், குறு கிய குழுநலன்கள் கரைந்து போக வாய்ப் பேற்படும்.

உலகில் எந்தவொரு நாட்டை எடுத் துக் கொண்டாலும் வெகுஜனப் போராட் டங்கள் இல்லாமல் ஆயுதப் போராட்டங் கள் வெற்றியளித்ததில்லை. இராணுவச் சதிகள் வேறு, போராட்டம் வேறு. இரண் டையும் ஒன்றாக இங்கு நோக்கக் கூடாது. ருஷ்யாவில் சோஷலிசப் புரட்சி நிலவுவ தற்கு தொடர்ச்சியான வேலை நிறுத்தங்கள், மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகள், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் போன்ற பல் வேறுபட்ட வெகுஜனப் போராட்ட அம் சங்கள் பெரும் துணைபுரிந்தன. கியூபாவில் கஸ்ரோவின் தலைமையிலான புரட்சி வெற் றியளிப்பதற்கு அங்கு தொடர்ச்சியாக நிகழ்ந்துள்ள கரும்புத்தோட்டத் தொழிலா ளர்களின் போராட்டங்கள், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், மற்றும் தொழிற்சங்க நட வடிக்கைகள் என்பன பெரும் பங்காற்றின. ஈரானில் ஷா மன்னனையும் அமெரிக்க ஏகா திபத்தியத்தையும் வீழ்த்திய புரட்சியில் மசூ திகளை மையமாகக் கொண்டெழுந்த ஆர்ப் பாட்டங்கள், ஊர்வலங்கள், மற்றும் வெகு ஜனப் போராட்டங்கள் அனைத்தும் இணை ந்து வெற்றியை நிர்ணயித்தன. இந்தவகை யில் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் மறி யற் போராட்டங்கள், வேலைநிறுத்தங்கள் உண்ணாவிரதங்கள், பகிஷ்கரிப்புகள் போன்ற வெகுஜனப்போராட்ட அம்சங்கள் அவ்வப்போதைய சூழ்நிலைக்கேற்பத் தெரிந் தெடுத்து பயன்படுத்துவதன் மூலம் போ ராட்டங்களை முன்னேற்ற உதவியாக இருக் கும். இதற்காக வெகுஜனப் போராட்டம் என்று சொல்லிக்கொண்டு அடிக்கடி ஹர்த் தால்களையும், பகிஷ்கரிப்புக்களையும் ஒழுங்கு செய்யக்கூடாது. அதற்குரிய வரையறைக ளைக் கருத்திலெடுத்து தேவைக்கேற்பப் பயன்படுத்த வேண்டும்.

எனவே சரியான வழியில் முன்னெடுக் கப்படும் வெகுஜனப் போராட்டங்கள் மக் களை அரசியல் மயப்படுத்த உதவும்; பிரச்சி னைகளை வெளிப்படுத்த உதவும்; எதிரியை அம்பலப்படுத்த உதவும்; எதிரிக்கு நெருக் கடிகளை உள்ளாக்க உதவும்; மொத்தத்தில் எமது போராட்டத்திற்கான பிரச்சாரத் தை முன்னெடுக்கவும், ஆதரவைப் பெற வும் உதவும்; ஆயுதப்போராட்டத்தை வள ர்த்தெடுக்க உதவும். சகோதரத்துவ உணர் வை வளர்க்கவும், பண்படவும் இத்தகைய வெகுஜனப் போராட்டங்கள் பெரும் பங் காற்றும்.

✲ ✲ ✲

# தமிழ் பேசும் மக்கள்
# எதிர்நோக்கும் ஒடுக்குமுறைகளில் நிலச்சூறையாடல்

— செம்பாட்டான் —

ஸ்ரீலங்கா அரசு சிங்கள - பௌத்த பேரினவாதத்தை விஸ்தரிக்கவும், எல்லைப் புறங்களில் இருக்கின்ற சிங்கள-தமிழ் விவசாயிகள், உழைக்கும் வர்க்கங்கள் என்போரிடையே முரண்பாடுகளை வளர்க்கவும் கொடூரத்தன்மை வாய்ந்த குடியேற்றங்களை பல வழிகளில் மேற்கொண்டு வருகின்றதெனவும், அதில் திட்டமிட்ட விவசாயக் குடியேற்றம் பற்றியும், சட்டவிரோத விவசாயக் குடியேற்றம் பற்றியும் ஆனி - ஆடி இதழில் பார்த்தோம்.

## கைத்தொழில் குடியேற்றம்

இந்த வகை சுவீகரிப்பில் திருமலை மாவட்டமே கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளது. திருமலை மாவட்டத்தில் பாரிய கைத்தொழில் நிறுவனங்களுக்காகவும் உல்லாசப்பயண விடுதிகளுக்காகவும் ஏராளமான தமிழ், முஸ்லிம்களின் காணிகள் பறிக்கப்பட்டுள்ளன. அந்நிய முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட பிரிமா ஆலை, ஆரம்பிக்கவிருக்கின்ற உத்தேச எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் போன்றவற்றிற்கே பெருமளவு காணிகள் பறிக்கப்பட்டன. இந்நிலையங்களில் ஊழியர்களாக பெருமளவு சிங்களவர்கள் சேர்க்கப்பட்டு நிலையத்தைச் சுற்றி அவர்களுக்காக வீடுகள் கட்டப்பட்டு அப்பிரதேசத்தையே சிங்களப்பிரதேசமாக்கும் சூழ்ச்சிகள் நடைபெறுகின்றன. பிரிமா ஆலையில் பிரான்சின் உதவியுடன் 450 வீடுகள் கட்டப்பட்டுசிங்கள வர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இவ் ஆலையில் 379 சிங்கள ஊழியர்களும் 723 தமிழ் ஊழியர்களும் பணியாற்றுகின்றனர். இதைவிட உல்லாசப் பிரயாணிகளின் விடுதிகள் அமைப்பதற்காக உப்புவெளி, நிலாவெளிப் பகுதிகளில் ஏராளமான காணிகள் சிங்கள முதலாளிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

## வியாபாரக் குடியேற்றம்

இவ்வகையான குடியேற்றத்தினால் திருமலைப் பட்டினமே கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளது. திருமலை மரக்கறிச்சந்தை முழுவதுமே இன்று சிங்களவர் கைக்குச் சென்றுவிட்டது. திருமலை பஸ்நிலையத்தில் பெட்டிக்கடைகளுடன் இருந்த சிங்களவர்கள் எவ்வித அனுமதியுமின்றி நிரந்தரக் கடைகளை அமைத்துள்ளனர். இவர்களை அகற்றுவதற்கு திருமலை நகரசபை தீர்மானித்து நடவடிக்கை எடுக்க முயன்றும் கூட அரசின் தலையீட்டினால் அது தோல்வியிலேயே முடிந்தது. இதனை விட கல்முனையில் அமைக்கப்பட்ட நவீன மாடிச்சந்தையில் கணிசமானபங்கு சிங்களவர்கட்கு வழங்கப்பட்டுள்ளது.

## மீனவர் குடியேற்றம்

தமிழ் பேசும் மக்களுடைய பிரதான பொருளாதாரங்கள் விவசாயமும், மீன்பிடியுமேயாகும் இவ்விரண்டிலும் ஊடுருவுவதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் பொருளாதாரத்தைச் சிதைக்க சூழ்ச்சிகள் திட்டமிடப்பட்டு திரைமறைவில் நடைபெறுகின்றன. தமிழ்பேசும் மக்களின் மீன்பிடித்தொழில் முயற்சியைச் சிதைப்பதற்காக கொக்கிளாய், புல்மோட்டை, புன்னன் குடா, நாயாறு போன்ற இடங்களில் சிங்கள மீனவர் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனைவிட அம்பாறை மாவட்டத்தினுள் சேனநாயக்கா சமுத்திரத்திலும் ஏனைய குளங்களிலும் நன்னீர் மீன்பிடித்தொழில் செய்த தமிழ் பேசும் முஸ்லிம்கள் சிங்களவர்களால் விரட்டியடிக்கப்படடுள்ளனர். மேலும் இதே மாவட்டத்தில் அறுகம்பை, உல்லை, எலவை போன்ற இடங்களில் உள்ளூர் மீனவர்களுக்கென அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட மீனவர் குடியேற்றத்துக்கான வீடுகளில் காலி, மாத்தறை போன்ற இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

## முப்படையினருக்கான குடியேற்றங்கள்

முப்படையினரும் தளம் அமைத்திருக்கும் திருகோணமலையில் ஒவ்வொரு படைப் பிரிவினரும் தாம் தங்கியிருக்கும் இடங்களிலிருந்து வேறாக தமக்கு வசதியான இடங்களில் பண்ணைகளை அமைத்துள்ளனர். அல்லை-கந்தளாய் வீதியில் இராணுவத்தினரின் புகையிலைப் பண்ணையும், கடவானையில் கடற்படையினரின் விவசாயப் பண்ணையும் இருக்கின்றன. இவற்றில் வேலைக்குச் சிங்களவர்களே அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு முப்படையினரின் வாகன வசதிகள் இங்கு கிடைக்கின்றன. இது பல வகைகளிலும் சிங்கள குடியேற்றங்களை வலுவுடையனவாக்குகின்றன.

## புனித பிரதேச குடியேற்றம்

### 1. தீகவாபி

தீகவாபி புனித அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான 997 ஏக்கர் காணி அரசினால் பறிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் முஸ்லிம் மக்கள் பன்னூறு ஆண்டு காலமாக விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். காலஞ்சென்ற அல்ஹாஜ் ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்கள் கல்முனைப் பகுதியில் உதவி அதிபராக இருந்தபோது இப்பகுதியில் விவசாயம் செய்த மக்களுக்கு தற்காலிக அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. அதன் பின்னர் கல்லோயா அபிவிருத்திச் சபையாலும், பின்னர் ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையினாலும், பின்பு மாவட்ட அரசாங்க அதிபரினாலும் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும் தத்தாகதி மகா சம்புத்த பிரான் தீகவாபிக்கு விஜயம் செய்து 500 பிக்குகளுடன் தியானத்தில் அமர்ந்துள்ளார். ஆதலால் இப்பிரதேசத்தை புனிதபிரதேசமாக அபிவிருத்திசெய்யவேண்டுமென்று கூறி காணிகளை அரசினர் அபகரித்துள்ளனர். இதற்கு முன்னரே 1968ல் ரணதுங்க கமிட்டியின் தீர்மானப்படி தீகவாபியில் 585 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டது. சுவீகரிக்கும் போது இனிமேல் இவ்விடங்களில் காணி சுவீகரிப்பதில்லை என வாக்குறுதி கொடுத்திருந்தனர். ஆனால் மீண்டும் வாக்குறுதியை மீறி காணிகளை சுவீகரித்துள்ளனர். காணிகளை இழந்த மக்களுக்கு வேறிடங்களில் காணி கொடுப்பதாகக் கூறியும் இதுவரை கொடுபடவில்லை. வேறிடங்களில் காணிகொடுப்பது கூட இந் நிலச்சூறையாடலுக்கு தீர்வாகமாட்டாது. இதுவரை அம்பாறை மாவட்டத்தில் 10,257 ஏக்கர் புராதன முஸ்லிம்களின் காணிகள் சூறையாடப்பட்டுள்ளன.

### 2. சேருவல புனித நகர்த் திட்டம்

தமிழ் முஸ்லிம்களின் தொகுதியான மூதூரில் அடங்கியிருந்த சேருவல 1976ஆம் ஆண்டு சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியின் போது தனித்தனித் தொகுதியாக பிரிக்கப்பட்டது. திருமலை மாவட்டத்தில் அடங்கியிருந்த மொத்த நிலப்பரப்பில் 3/5 பங்கை சேருவல தொகுதி அடக்கிக்கொண்டது. 1977 இலிருந்து இன்றுவரை U.N.P. ஆட்சியில் இது புனித நகர்த் திட்டம் மூலம் மிகப்பெரிய நகராக மாற்றப்பட்டு வருகின்றது. திட்டமிட்டு வேறு மாவட்டத்தைச் சேர்ந்த பெருந்தொகையான சிங்கள மக்கள் இங்கு குடியேற்றப்பட்டுள்ளார்கள். திருமலை மாவட்டத்தின் சனத்தொகையில் 2ம் இடத்தை வகித்துவந்த முஸ்லிம்கள் இப்போது 3ம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இதன் மூலம் இனி நடக்கப்போகும் மாவட்ட ரீதியிலான தேர்தலின் கீழ் இம் முஸ்லிம்கள் தமக்குரிய பிரதிநிதித்துவத்தை இழக்கும் அபாயத்தில் இருக்கின்றார்கள். தீகவாபி, சேருவல புனித நகர்த் திட்டம் போலவே திரியாய் புனித நகர்த் திட்டம் மூலமும் தமிழ் முஸ்லிம்களின் காணிகள் பறிக்கப்பட்டுள்ளன.

## தமிழ்ப் பிரதேசத்துடன் சிங்களப்பிரதேசத்தை இணைத்தல்

குடியேற்றப்பட்ட மாவட்டங்களில் தங்கள் எண்ணிக்கையைக் கூட்டி குறிப்பிட்ட மாவட்டத்தின் அரசியல் அதிகாரத்தினை தாங்கள் கைப்பற்றுவதே இவ்விணைப்பின் முக்கிய நோக்கம் ஆகும். இதன்படி அம்பாறை மாவட்டத்துடன், முன்னர் மொன

ருகலே மாவட்டத்துடன் இணைந்திருந்த இரண்டு பிரதேசங்களான மகா ஓயாவும் பதியத்தலாவையும் இணைக்கப்பட்டன. இதனால் பதியத்தலாவையில் 13,501 பேரும் மகா ஓயாவில் 13,018 பேரும் அம்பாறை மாவட்ட பிரஜைகளாயினர். இதன் மூலம் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தலின் படி கூடிய உறுப்பினர்களை தாங்கள் பெற்று அம்பாறை மாவட்டத்தின் அரசியல் அதிகாரத்தை தாங்கள் கைப்பற்றி அம்மாவட்டத்தை சிங்கள மாவட்டம் ஆக்கும் முயற்சியில் அரசு இறங்கியுள்ளது. இம் முயற்சிகளில் பெரிய வெற்றிகளையும் அவர்கள் பெற்றிருக்கின்றனர். அவ் வெற்றியின் பெறுபேறே 1947ஆம் ஆண்டு 3000 ஆகக் காணப்பட்ட சிங்களவர் எண்ணிக்கை இன்று 1,46,371 ஆக அதிகரித்துள்ளது. முஸ்லிம் மாவட்டத்திலேயே முஸ்லிம்கள் சிறுபான்மையினராகி பலமற்ற இனக் குழுவாக சிதையும் அபாயம் தோன்றியுள்ளது.

## குடியேற்றும் போது மேற்கொள்ளும் தந்திரோபாயங்கள்

குடியேற்றங்களை மேற்கொள்ளும் போது மிகச்சிறந்த தந்திரோபாயங்களை இவர்கள் மேற்கொள்கின்றார்கள். அவையாவன:

1. நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் குடியேற்றி நீர்ப்பாசன ஆதிக்கத்தை தங்கள் கையில் வைத்திருத்தல்: இதனை கல்லோயா, கந்தளாய், அல்வ, பதவியா போன்ற திட்டமிட்ட விவசாய குடியேற்றங்களில் நாம் கண்டுகொள்ளலாம். கல்லோயாத் திட்டத்தில் பெயருக்காக சில குடியேற்றக் கிராமங்கள் தமிழ் பேசும் மக்களுக்கு கொடுக்கப்பட்ட போதும் அக்கிராமங்கள் ஒன்றில் நீர்ப்பாசன வசதியற்றதாகவோ அன்றி சிங்களக் கிராமங்களினூடு நீர்ப்பாசனம் செல்வதாகவோ இருந்தன.

2. குடியேற்றங்களை அருகிலுள்ள சிங்கள மாவட்டங்களுடன் போக்குவரத்து வசதி செய்யக்கூடியதாக அமைத்தல். உ+ம் திருமலை மாவட்டத்தில் அமைக்கப்பட்ட குடியேற்றங்கள் பொலன்னறுவை மாவட்டத்துடனும் அநுராதபுரம் மாவட்டத்துடனும் போக்குவரத்து வசதி செய்யக் கூடியதாக அமைக்கப்பட்டது.

3. தமிழ் பேசும் மக்களின் தொடர்புகளை துண்டிக்கக்கூடிய வகையில் அவர்களுடைய பிரதேசங்களை ஊடறுத்து செல்லக் கூடிய வகையில் குடியேற்றத்திட்டங்களை அமைத்தல். இதற்கு உதாரணமாக சேருவல தொகுதியையும். பதவியாத் திட்டத்தையும் குறிப்பிடலாம். சேருவல தொகுதியின் அமைப்பினால் திருமலை மாவட்ட மட்டக்களப்பு மாவட்ட தொடர்புகள் துண்டிக்கப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

4. குடியேற்றத் திட்டங்களில் திட்டமிட்டு இனக்கலவரங்களை உருவாக்கல். இதன் மூலம் குடியேற்றத் திட்டத்திலுள்ள தமிழ் பேசும் மக்களை அப்புறப்படுத்தி விட்டு அவ் விடங்களையும் தாங்கள் ஆக்கிரமிக்கும் போக்கு தோன்றியுள்ளது. 1956 ஆம் ஆண்டுக்கிடையில் கல்லோயாக் குடியேற்றத்தில் மட்டும் 150 தமிழ் பேசும் மக்கள் கொல்லப்பட்டனர்.

## உசாத்துணை நூல்கள்


1. தர்க்கீகம்
2. அம்பாறை மாவட்ட நிலப்பிரச்சினைகளும் குடியேற்றப் பிரச்சினைகளும்
   சிந்தனை - சித்திக்
3 The Tamils and Trincomalee
   - *Selladurai Gunasingam*
4 Liberation Strugle of Tamil Elam
   *L. T. T. E.*
5. முஸ்லிம் ஐக்கிய விடுதலைக் கழகத்தின் துண்டுப் பிரசுரம்.


★ ★ ★

இலங்கைத் தீவு

# தோட்டத் தொழிலாளரைப் பற்றிய

# பொய்மைகளும் உண்மைகளும்

மாவலியான் — தொடர்: ஆறு

## (11) தேசிய இன அடக்குமுறை

மேற்கூறிய சகலதுறைகளிலும் மலையக மக்கள் மீது தேசிய இன அடக்குமுறை பிரயோகிக்கப்படுவதை உணரலாம். அவற்றை விட நேரடியான, வெளிப்படையான தேசிய அடக்குமுறைக்கும் இவர்கள் முகங் கொடுத்து வருகிறார்கள். அவற்றை இனிப் பார்ப்போம்.

**1. வன்செயல்கள்:** *1977, 1981* வன்செயல்கள், பிரவுண்லோ சம்பவம், டெல்டா சங்குவாரி தோட்ட சம்பவம் போன்ற காட்டுமிராண்டித்தனங்களை இங்கே அதிகம் விபரிக்கத்தேவையில்லை. சில விபரங்களை மாத்திரம் தருவோம்.

✻ *1977* ஒகஸ்ட் வன்செயல்களை ''போரா சமாதானமா?'' என்று இந்த அரசாங்கமே உத்தியோக பூர்வமாக பிரகடனப்படுத்தியது. *1700*க்கும் அதிகமான மலையகமக்களை அகதிகளாக்கிய இச்சம்பவத்தை விசாரிக்க ''சன்சோனிக் கொமிசன்'' நியமிக்கப்பட்டது. அந்தக் கொமிசன் என்னவானது என்பதை விசாரிக்க இன்னொரு கொமிஷனை அரசாங்கம் நியமித்தாலும் ஆச்சரியமில்லை. தமது உடமைகள் அனைத்தையும் இழந்து அனாதரவான இம்மக்களுக்கு எந்த ஒரு நிவாரணத்தையும் அரசாங்கம் வழங்கவில்லை. மாறாக, இந்த அகதிகளுக்கு மனிதாபிமானத்துடன் நிவாரண உதவி நல்கிய தொண்டர் ஸ்தாபனங்களை அழித்தொழித்து வருகிறது.

✻ *1981* வன்செயல் கூட அரசாங்கத்தின் பொறுப்பில்லாத ஒரு சில அமைச்சர்களினால் திட்டமிட்டு தூண்டப்பட்டது என்பது யாவரும் அறிந்த ரகசியம். இதன் பின்னணியில் இருந்ததாக பெரிதும் பொதுமக்களால் சந்தேகிக்கப்படும். இரத்தினபுரி எம். பி. புஞ்சிநிலமே அவர்கள் இது தொடர்பாக ஓர் அனுதாபச் செய்தியை வெளியிட்டார். ''அண்மையில் இப்பகுதியில் நடைபெற்ற வன்செயலின் போது ஒருவரைக் கொலை செய்து அவரின் ரத்தத்தைக் குடித்தாகவும், பல இளம் யுவதிகள் பலாத்காரமாக கற்பழிக்கப்பட்டதாகவும் கேள்வியுற்று என் மனம் மிக வேதனையடைந்தது. பௌத்த மதத்தைக் கடைப்பிடிப்போர் *80* சதவீதம் வாழும் இந்நாட்டில இப்படியான சம்பவங்கள நடந்தமை வருந்தத்தக்கது.'' (வீரகேசரி - செப *24, 1981*) இதன மூலம் தமிழரைக் கொலை செய்து ரத்தத்தைக் குடிக்கும அளவுக்கு சிங்கள மக்களில ஒரு சாராரை தேசபக்தியின பெயரால, இனத்தின பெயரால வெறி கொள்ள வைப்பதில வகுப்புவாத அரசியல வெற்றி பெற்றுள்ளதை தமையுமறியாமல் அவர் ஒத்துக கொண்டார்.

✻ இந்த வெறியாட்டம் நடந்து கொண்டிருக்கும் போது ''இண்டியா ருடே'' (இன்றைய இந்தியா) நிருபருக்கு அது உத்தம ஜனாதிபதி ஜே. ஆர். பேட்டி அளிக்கிறார்.

நிருபர்; பாதுகாப்பின்மை, அச்சம் காரணமாக தோட்டத் தொழிலாளர் இந்தியாவுக்கோ, யாழ்ப்பாணத்திற்கோ போய் விட்டால், தமிழ் தொழிலாளரில் முழுமையாகத் தங்கியுள்ள பெருந்தோட்டங்களை எவ்வாறு நடத்துவீர்கள்?

ஜே. ஆர்: பிரஜைகள் அல்லாதோர் திரும்பிப் போகலாம்.

நிருபர்: ஆனல்... ஐந்து தலைமுறைகளாக இங்கு வாழ்ந்த பிறகு?

ஜே. ஆர்: ஆம்...! அவர்கள் போகத்தான் வேண்டும்.

நிருபர்: அமெரிக்க மண்ணில் ஒரு குழந்தை பிறந்தால் அந்நாட்டின் பிரஜாவுரிமை தாய்க்கும் கூட வழங்கப்படுகிறது .

ஜே. ஆர்: அப்படி இருக்கலாம். ஆனல் இங்கே வித்தியாசமான பிரஜாவுரிமைச் சட்டம் உள்ளது.

இதிலிருந்து அரசாங்கத்தின் மனுேபாவம் புரியவில்லையா?

❋ 1981 வன்செயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஜனாதிபதியுடன் அமைச்சர் காமினி திசாநாயக்காவும் பார்வையிடுவதற்காகச் சென்றிருந்தார். அவரது அபிப்பிராயம் வானெலியிலே தமிழ் ஒலிபரப்பில் பாதிக்கப்பட்டோருக்கு பரிவுகாட்டுவது போலவும், சிங்கள ஒலிபரப்பில் கூறப்பட்டது போல நிலைமை மோசமாக இல்லை' என்று ஒலிபரப்பப்பட்டது.

இவ்விரு வன்செயல்களிலும் மலையகத் தமிழரே பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

II. மலையகத் தொழிலாளரின் வாக்குரிமையும், பிரஜாவுரிமையும் 1948/49ல் பறிக்கப்பட்டமை இவர்கள் மீதான அரசியல் அடக்கு முறையின் ஓர் உயந்த வடிவமாக கருதலாம்.

III. 1958 வன்செயலில் அதிகமாக பாதிக்கப்பட்டவரும் இவர்களே.

IV. 1964ல் கைச்சாத்தான ''ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம்'' மனிதாபிமானம் படைத்த எவராலும் கண்டிக்கப்பட்டது. இருநாட்டுத் தலைவர்களால் மந்தைகள் பங்கிடப்படுவது போல வெறும் எண்ணிக்கை அடிப்படையில் முடிவெடுக்கப்பட்டது. இவ்வொப்பந்தம் இரு நாடுகளும் மலையக தமிழரை தேவையில்லாத ''ஓர் உபரி'' அல்லது ''சுமை'' என்ற கண்ணுேட்டத்தை வெளிப்படுத்தின. இதன் அடிப்படையில் அன்றைய மொத்த 975,000 மலையக தமிழரில் 525,000 பேருக்கு இந்தியா 15 வருடங்களில் இந்தியபிராஜா உரிமை வழங்கும் என்றும் இலங்கை 300,000 பேருக்கு பிரஜா உரிமை வழங்கும் எனவும் மீதி 150,000 பேரைப்பற்றி பின்னர் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தினல் மலையக மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் சங்கடங்களும் அவலங்களும் கொஞ்ச நஞ்சமல்ல. அவற்றை எல்லாம் இங்கு விபரிக்க முடியாது.

இலங்கை அரசாங்கம் ''நாடற்றவர்'' 'பிரஜா உரிமையற்றேர்'' எனும் காரணங்களைக் காட்டி காணிப் பங்கீடு, அரசாங்க வீடுகள் போன்றவற்றில் மலையக மக்களுக்கு கதவடைப்பு செய்து வருகின்றது. ஆயிரத்தில் லட்சத்தில் ஒருவராக படித்தோரும் தோட்டத் தொழிலாளரின் பிள்ளைகளுக்கு இதே காரணத்தால் அரசாங்க உத்தியோகம் மறுக்கப்படுகிறது.

இந்திய அரசாங்கமோ இலங்கையிலிருந்து நாடுகடத்தப்படும் தோட்டத் தொழிலாளரை கழித்தொதுக்கப்பட்ட பிரஜைகளாகக் கருதி பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்கிறது ''தாயகம் திரும்புவோரின்'' அவலத்தைப் பற்றி ஐ.ரீ.ஈ.எஸ். (ITES) விரிவான ஆய்வொன்றை நடத்தியுள்ளது. அதன்படி இந்திய அரசாங்கம் 65 வீதமானவர்களுக்கு ''சுயதொழிலில்'' ஈடுபடுவதற்காக ஒருசிறு தொகைப் பணத்தை கடனுகக் கையில் கொடுத்து தனது கடமையை முடித்துக்கொண்டுள்ளது. (72 வீதத்திற்கு 3000 ரூபா மாத்திரம இவ்வாறு வியாபாரக் கடனுக வழங்கி, வியாபார அனுபவமே இல்லாத அவர்களை செத்தாலும் சரி, பிழைத்தாலும் சரி என தனது கையைக் கழுவிக்கொண்டது.)

இந்தியா செல்வோரில் 90 வீதத்தினர் இந்தியாவைப் பார்த்ததே இல்லை. அவர்களுக்கு இந்தியக் கிராமிய சூழல் அந்நியமானது. எந்தவொரு தொழிற்திறனும் இல்லாத, கல்வி அறிவற்ற இம்மக்கள் கையில் கிடைக்கும் காசிலே பெரும்பகுதியை சாப்பாட்டில் செலவழித்து விட்டு தொழில் இன்றி, வீடின்றி, வருவாய் இன்றி பரிதாபகரமாக தெருவோரங்களில் வாழ்கிருர்கள்.

இலங்கையிலிருந்து இந்தியா திரும்பியோரில் 88 வீதத்தினர் வறுமை மட்டத்தின் கீழ் இருப்பதாக அவ்வறிக்கை கூறுகிறது.

'மைத்ரி' உட்பட மூன்று ஸ்தாபனங்கள் கூட்டாக மேற்கொண்ட ஆய்வின்படி மூன்று வருடங்களுககுள் 'தாயகம்' திரும்பியோர்ல் 55 வீதத்தினர் வறுமை காரணமாக செத்து மடிந்துள்ளனர்.

முடிவாக, மலையக மக்களின் உண்மையான நிலையை அறிந்து, புரிந்து கொண்டு தமது வர்க்கச் சகோதரர்களுக்கு ஆதரவாகச் சிங்கள மக்கள் குரல் கொடுப்பதைத் தடுத்து அவர்களுடைய ஒத்துழைப்புடன் "மலையகத் தொழிலாளரை மூர்க்கமாகச் சுரண்டி லாபம் ஈட்டுவதையும், தேசிய தப்பபிப்பிராயத்தை ஊட்டிவளர்த்து தனக்கெதிராகக் கிளர்ந்தெழும் மக்கள் சக்தியைப் பிளவுபடுத்தி பலவீனப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டே ஆளும் வர்க்கம் இத்தகைய பொய்மைகளைத் திட்டமிட்டுப் பரப்பி வருகிறது.

மறுபுறத்தில் மலையகத்தைச் சேர்ந்த தனது விசுவாசமான கையாட்களுக்கு மந்திரி பதவி எலும்புத் துண்டைக் கொடுத்து இத்தகைய தப்பபிப்பிராயங்களை சிங்கள மக்கள் மத்தியில் மேலும் வளர்ப்பதுடன் மலையக மக்கள் மத்தியில் உருவாகும் போராட்டங்களை அந்தக் கையாட்களைக் கொண்டே முறியடிக்கிறது. அத்துடன் சர்வதேச அரங்கில் தனது இனவாதத் தன்மையை மூடி மறைக்கவும் அதே கையாட்களை கவசமாகப் பாவித்துக் கொள்கிறது.

சிங்களவர் தம்மவர் என்று போராட்டம் வரும்போது ஆளும் வர்க்கம் அனுதாபம் காட்டுகிறதா? ஏனைய தேசிய இனங்கள் மீது கொண்ட காழ்ப்பு சிங்கள மக்களுக்கு என்ன லாபத்தை பெற்றுத்தந்திருக்கிறது இதுவரை சாகாமல் உயிர் வாழ்வதெப்படி என அன்றாட வாழ்கையுடன் போராடும் அவர்களது ஆத்திரத்தையும் அதிருப்தியையும் திசை திருப்பத்தான் அது பயன்பட்டுள்ளது. இதனால் சிங்கள மக்களுந்தான் ஏனைய மக்களைப் போலவே துயரச் சேற்றில் ஆழ்ந்து புதைகின்றனர். இதிலிருந்து ஒன்று மாத்திரம் தெளிவு:

ஏனைய தேசிய இனங்களை ஒடுக்குவதற்கு தனது தேசிய இனத்தைச் சேர்ந்த பூர்ஷ்வாக்களுக்கு ஒததுழைப்பு நல்கிக் கொண்டிருக்கும் வரைக்கும் சிங்கள மக்கள் தமது விடுதலையைப் பெறவே முடியாது.

முடிவுற்றது.

## "உன் அரண்மனை எனக்கு வேண்டாம்"

பிரான்ஸ் தேசத்துச் சிந்தனையாளன் வோல்ரயர் அரசனை எதிர்த்து எழுதியமைக்காக குற்றம் சுமத்தப்பட்டிருந்தார். அவரை மன்னன் 14ம் லூயி தனது அரண்மனைக்கு அழைத்தார்.

வோல்ரயரைப் பார்த்து மன்னன் பின்வருமாறு கேட்டார்;

"என்னையும் எனது ஆட்சியையும் புகழ்ந்தெழுதுவாயானால் உன்னை விடுதலை செய்வதுடன் அரண்மனையில் வாழ வசதி செய்து தருகிறேன்."

வோல்ரயர் பின்வருமாறு பதிலிறுத்தார்:

'மன்னாதிமன்னா! உன் அரண்மனையைப் பாடும் சந்தர்ப்பம் என்க்கு வேண்டாம்; உன் சிறைச்சாலையைப் பாடும் சந்தர்ப்பத்தை நீ எனக்குத் தந்தாற் போதும்"

மன்னாதிமன்னனின் நெஞ்சக்கோட்டை அதிர்ந்தது. கற்கோட்டையின் இரும்புப் பூட்டுக்குள் வோல்ரயர் தள்ளப்பட்டார். ஆனால் வரலாற்றுக் கதவுகள் வோல்ரயருக்காய் அகலத்திறந்தன.

# தெற்காசிய சூழ்நிலையில் தமிழீழப் போராட்டமும், சோஷலிஸத்திற்கான பாதையும்

கண்ணாடி

இந்த விடயத்தைப் பொறுத்தவரை முதல் கட்டமாக தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் தன்மையை ஆராய வேண்டியதன் அவசியத்தை கண்ணாடி உணர்கிறது. இந்நிலையிலேயே தரப்பட்ட விடயத்தின் உண்மை சொரூபத்தை நான்கு அம்சங்களாகப் பிரித்துப் பார்ப்பதன் மூலம் உண்மை நிலையை உணர்த்த கண்ணாடி விரும்புகிறது. இதனை

(1) இனவாதத்தின் தோற்றம்

(2) தமிழீழத்தின் அவசியம்

(3) இந்தியாவின் அரசியல் போக்கு

(4) தெற்காசிய சூழ்நிலை

எனப் பிரித்துப் பார்க்கலாம்.

## இனவாதத்தின் தோற்றம்

1948ம் ஆண்டு ஆங்கிலேயரிடமிருந்து 'அரசியல் சுதந்திரம்' என்ற போர்வையில் வெறும் 'கொடிமாற்றம்' ஏற்பட்ட பின்னர் ஆட்சியை மாறிமாறி கைப்பற்றிய சிங்கள இனவாத அரசுகளே, இன்று முனைப்படைந்துள்ள இனவாதத் தன்மைக்குக் காரணமென பலராலும் கணிக்கப்படுகிறது. உண்மை அதுவன்று! இலங்கையை பொருளாதார ரீதியில் சுரண்டும் பொருட்டு 1802ம் ஆண்டு அமீன் சமாதான ஒப்பந்தத்தின் படி இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை கைப்பற்றிய ஆங்கிலேயர் 1815ம் ஆண்டு முழு நாட்டையுமே தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். இந்நிலையில் கண்டி இராச்சியத்தில் இருந்த 3000 அடிக்கு மேற்பட்ட நிலங்களை பெரும் தோட்டப் பயிர்ச் செய்கைக்கு உகந்த நிலமாக இனம்கண்டுகொண்டனர். அக்காலத்தில் இந்தியா, இலங்கை போன்ற பல நாடுகளை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்த ஆங்கிலேயருக்கு இந்தியாவில் அதுவும் தஞ்சாவூர்க் கோடிக்கரை போன்ற பல பிரதேசங்களில் திட்டமிட்ட முறையில் பஞ்சத்தை ஏற்படுத்துவது சிக்கலான காரியமல்ல. தாங்கவொண்ணா பஞ்சத்துக்கு உட்பட்ட தமிழ் மக்கள் அன்று திட்டமிட்ட முறையில் சொர்க்க பூமியாகக் காட்டப்பட்ட அல்லது விமர்சிக்கப்பட்ட இலங்கைத் தீவிற்கு குடிபெயரல் ஆனார்கள். இக்குடிபெயர்வானது திட்டமிட்ட பஞ்சத்தினாலும், தவறான விமர்சனத்தின் ஊடாகவுமே மேற்கொள்ளப்பட்டதாகும். இவ்வாறு குடிபெயர்ந்த மக்களில் பெரும் பகுதி இன்று 'மலையக மக்கள்' என பலராலும் அழைக்கப்படும் இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக செயல்படும் மக்களே. இவ்வாறு குடிபெயர்ந்த மக்கள் சிங்கள ஏழை விவசாயிகளிடமிருந்து தானிய வரி, நில வரி மூலம் பறிக்கப்பட்ட 3000 அடிக்கு மேற்பட்ட கண்டிய மண்ணில் குடியேற்றப்பட்டனர். இதன் காரணமாக தானிய வரி, நில வரிச் சட்டங்கள் மூலம் பாதிப்படைந்த சிங்கள விவசாயிகளுக்கும், குடிபெயர்ந்த தமிழ் மக்களுக்கும் இடையிலான பகைமை உணர்வு மேலோங்கிற்று. சொர்க்க பூமியாகக் காட்டப்பட்ட இலங்கைத் தீவிற்கு, குடிபெயர்ந்த மக்களுக்கான கூலி, அவர்கள் உயிர் வாழ்வதற்கும் இனத்தைப் பெருக்க மட்டுமே போதுமானது என்பது ஒரு புறம் இருக்க இப் பகைமை உணர்வின் காரணமாக அப் பிரதேசங்களில் உள்ள சிங்கள, தமிழ் மக்களின் ஐக்கியம் குலைந்து திட்டமிட்ட முறையில் தொழிலாளி வர்க்கம் பிளவுபடலாயிற்று. இவ்வாறு இனங்களைப் பிளவுபடுத்துவதன் மூலம் தமது தேசிய ரீதியிலான சுரண்டலை விஸ்தரித்து வந்த ஆங்கிலேயர் குடிபெயர்ந்த மக்களை நிர்வகிக்கும் பொறுப்பை வடக்கு, கிழக்கு வாழ் அதே மொழி பேசும் மக்களிடம் ஒப்படைத்தது. இந் நிலையின் காரணமாகத் தம்மை அதிமேதாவிகளாக எண்

ணிக் கொண்ட வடக்கு, கிழக்கு வாழ் நிர்வாகிகளும், தமிழ்த் தலைவர்களும் குடி பெயர்ந்த மக்களை தம்மிலிருந்து அன்னியப்படுத்திய நிலையிலேயே வைத்திருந்தனர். இந் நிலைகளை திட்டமிட்டு உருவாக்கிய ஆங்கிலேயர் வரிச் சட்டங்களினூடு பறித்தெடுத்த நிலங்களில் குடிபெயர்ந்த மக்களை குடி அமர்த்துவதன் மூலம் குடியேறிய மக்கள், குடியேறிய பிரதேசங்களைச் சுற்றி உள்ள சிங்கள மக்கள் மத்தியில் 'குடியேறிய தமிழ் மக்கள் தம் மண்ணை ஆக்கிரமித்தவர்கள்' என்ற மனப்பான்மையை வளர்த்தனர். இதன் காரணமாக குடியேறிய தமிழ் மக்களுக்கும் சுற்றி உள்ள சிங்கள மக்களுக்கும் இடையிலே திட்டமிட்ட முறையில் இன ரீதியான வேறுபாடுகள் தோன்றின. இதே போல் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களை நிர்வாகிகளாக தெரிவு செய்ததின் காரணமாக வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் மக்கள், குடி பெயர்ந்த தமிழ் மக்களுடன் ஒட்டி உறவாடும் போக்கு நிராகரிக்கப்பட்டது. இவ்வாறு திட்டமிட்ட முறையில் 1917-ம் ஆண்டிலேயே தேசிய ரீதியில் தமது சுரண்டலை மேற்கொண்ட ஆங்கிலேயரால் இனவாதம் திட்டமிட்ட முறையில் ஊட்டப்பட்டது. இதனை ஆதாரபூர்வமாக வடக்கு, கிழக்கு வாழ் தமிழ்த் தலைவர்களின் மலையக மக்களை அன்னியப்படுத்தி ''மலையக மக்களுடன் இணையின் எமது சுகபோகங்களும் பறிபோய்விடும்'' என்ற மேடைப் பேச்சுகளும், சிங்களத் தலைவர்களினதும் ''எமது மண்ணை ஆக்கிரமிக்க வந்தவர்களே மலையக மக்கள்'' என்ற மேடைப் பேச்சுகளும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாறு ஒரே நாட்டு மக்களின் ஐக்கியத்தைச் சிதறடிக்கும் ஆங்கிலேயர் 1948-ம் ஆண்டு வெறும் அரசியல் சுதந்திரத்தை இலங்கை மக்களுக்கு அளித்தனர். இக் காலத்திற்கு முன்னரும் பின்னரும் தமக்குரிய அரசியற் கதிரைகளைப் பிடிக்க முயற்சித்து வந்த தமிழ், சிங்களத் தலைவர்களால் இனவாதம் இலங்கை மக்களுக்கு இன வேறுபாடின்றி ஊட்டப்பட்டது. இவ்வாறு இனவாத மேடைப் பேச்சுகளின் மூலம் தமிழ், சிங்களத் தலைவர்களினால் காலத்திற்குக் காலம் அரசியல் கதிரைகள் நிலை நிறுத்தப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதன் உச்சக்கட்டமாக, தரப்படுத்தல் முறை அமைந்தது எனலாம். தரப்படுத்தல், சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், நடுத்தர வர்க்கத்தினரை அதிகமாகக் கொண்டுள்ள தமிழ் மக்களை நேரடியாகப் பாதித்தது. இப்பாதிப்புகளுக்கு எதிராகவும் ஒடுக்குமுறையின் நடைமுறைப் போக்கையும் உணர்ந்து கொண்ட சில இளைஞர்கள் தம்மிடையே 1969-ம் ஆண்டு ஓர் இராணுவக் குழுவை ஏற்படுத்திக் கொண்டனர். அக் குழுவின் நடைமுறைச் சாத்தியமான அணுகு முறைகளுடன் ஒத்துவராத குட்டி பூர்சுவா சிந்தனை உடைய இளைஞர்கள் பிரிந்துசென்று தமது வர்க்கத் தட்டின் நலனிற்கும், அபிலாசைகளுக்கும் ஏற்ற விதத்தில் வேறு அமைப்புகளை உருவாக்கினர்.

## தமிழீழத்தின் அவசியம்

வெறும் இராணுவக் குழுக்களாக உருவான அமைப்புகள் காலப்போக்கில் மக்களிடத்தில் வேரூன்ற முற்பட்டபோது மார்க்சியத்தை உணர்ந்து கொண்டனர். இந்நிலையில் இராணுவக் குழுக்கள் மக்கள் அமைப்புகளாக தம்மை புடம்போட முற்பட்ட கால கட்டத்தில் ''தமிழீழம் அவசியமா'' என்ற கேள்வி, எல்லோர் மனதிலும் முக்கியமாக முற்போக்கு எண்ணம் கொண்ட இளைஞர் மத்தியில் உருவானது.

இந்நிலையை எடுத்து நோக்கின் திட்டமிட்ட முறையில் வேரூன்றப்பட்டுள்ள இனவாதமானது, சிங்கள, தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஐக்கியம் ஏற்படுவதற்கான சாத்தியத்தை வெகுவாகக் குறைக்கின்றது. இத்தன்மையை ஆராயுமிடத்து இன்று சிங்கள மக்களை, தரகு முதலாளித்துவ அடக்குமுறையையும் மீறி இனவாதம் என்ற மாயை அவர்களின் கண்களை மறைத்திருப்பது புலனாகின்றது. இனவாதம் என்ற மாயையை அகற்ற இரண்டு வழிகள் உண்டு.

1. சரியான புரட்சிகரக் கட்சியும் அதன் நடைமுறை வேலைத்திட்டங்களும்,

2. தமிழீழம் தனி அரசாக பிரகடனப் படுத்தப்படல்.

இதில் முதலாவது அம்சத்தை ஆராய்ந்து பார்த்தால், இன்று சிங்கள மக்கள் மத்தியில் நடைமுறை வேலைத்திட்டங்களைமுன்வைக்க முயற்சிக்கும்கட்சிகளும், இனவாதம் என்ற மாயையை அகற்ற முடியாமல் அதே மாயைக்குள் அமிழ்வதையே காண்கின்றோம். இந் நிலையில் இனவாதத்திற்கு எதிராக செயல்படுவதற்கு சரியான புரட்சிகரக் கட்சி ஒன்று சிங்கள மக்களிடத்தில் வெளிக்கொணரப்படாதவிடத்து, சிங்கள, தமிழ் மக்கள் ஐக்கியப்பட்டு ஒட்டுமொத்தமாக தரகு முதலாளித்துவ அரசைத் தூக்கி எறிய முடியுமா என்பது கேள்விக் குறியே!

இரண்டாவது அம்சத்தை நோக்கின் தமிழீழம் மலர்வதனூடாக மேலும் இனவாதத் தீயை வளர்க்க முடியாத சூழ்நிலைக்கு சிங்கள இனவாதத் தலைவர்கள் தள்ளப்படுவார்கள். இந் நிலை சிங்கள மக்களின் மீது தொடர்ச்சியான இனவாத அரசுகளால் திணிக்கப்பட்டுள்ள பொருளாதார அடக்கு முறைகளை வெளிக்கொணர வைக்கும்.

எனவே இரண்டுகட்ட வளர்ச்சிக்காக போராட வேண்டிய சிங்கள மக்கள் அவர்களின் முதல்கட்ட வளர்ச்சியான இனவாதத்திற்கு எதிரான போராட்டத்தை தமிழீழம் என்ற தனி அரசு வெற்றிகரமாகச் செய்து முடிக்கின்றது. எனவே அவர்கள் தமது அடுத்த கட்ட வளர்ச்சிக்காக மட்டுமே போராட வேண்டியவர்கள் ஆகின்றார்கள். எனவே தமிழீழம் மலர்வது அவர்களின் புரட்சியை இலகுபடுத்துகின்றது. இந் நிலையில் சிங்கள மக்களின் விடுதலை தமிழீழத்துடன் பின்னிப்பிணைந்தே காணப்படுகிறது.

இக் கண்ணோட்டத்தில் தமிழீழம் எதற்காக? நமக்கென்றொரு நாடு இல்லை என்பதற்காகவா? இல்லை நிச்சயமாக இல்லை! தரகு முதலாளித்துவ அரசு எப்பால், தமிழ் மக்களால் தூக்கியெறியப்படுகின்ற பிரதேசங்களே எனலாம். தமிழீழமானது தமிழ்மக்கள் பெருவாரியாக வாழ்கின்ற பிரதேசமாக அமைவதைக் காணலாம்.

> "தென்னாசியப்பிராந்தியத்தில் ஈழப் போராட்டம் சோஷலிஸப் பாதையின் திறவுகோல்" எனும் தலைப்பில் ஆனி-ஆடி 1985 இதழில் இடம் பெற்ற கட்டுரைக்கும் இவ்விதழில் இடம் பெறும் கட்டுரைக்கும் தாரிருக்கும் தொடர்பில்லை.

## இந்தியாவின் அரசியல் போக்கு

முதலாளித்துவ அடக்குமுறைகளுக்கு எதிராகச் செயல்படும் அரசுகள சர்வதேச முற்போக்கு அமைப்புகளிடமிருந்து உதவிகளைப் பெறுவதாயின் அதற்கு முதற்கட்டமாக சர்வதேச அரசியல சூழ்நிலைகளை ஆராய்வது அவசியமானதும், தவிர்க்க இயலாததுமாகும். இவ் ஆய்வில் இந்தியத் தேசிய முதலாளிகளுக்கு, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையாகச் செயல்படும் இலங்கை தரகு முதலாளித்துவ அரசு பெரும் இடைஞ்சலாக இருப்பது தெளிவாகப் புரியும். எனவே தரகு முதலாளிகளில் பாதுபபடையும் தேசிய முதலாளித்துவத்தை தொடர்ந்தும் நிலை நிறுத்தும் முயற்சியில் இந்திய அரசு இறங்குவது ஆச்சரியமில்லை. தேசிய முதலாளித்துவ அரசுகள ஏகாதிபத்தியத்தின பொதுச்சந்தைகளாக விளங்கும தரகு முதலாளித்துவ அரசுகளை நிலையற்ற தன்மைக்கு இட்டுச் செல்லும் நோக்குடன அவ்வப்போது தரகு முதலாளித்துவ நாடுகளில் குழப்ப நிலைகளைத் தோற்றுவித்துள்ளன. இதனடிப்படையில இலங்கைத் தரகு முதலாளித்துவ அரசை நெருக்கடிக்குள் உள்ளாக்கும் கருவியாக தமிழீழ விடுதலைப் போராளிகளை இந்திய அரசு பயன்படுத்த முயல்கிறது. இதனைத்துல்லியமாக உணர்ந்து கொண்ட தமிழீழ விடுதலைப் போராளிகள் 'தம்மை விட்டால் வேறு போக்கிடமற்ற' இந்திய அரசின் நிலையைத் தமக்குச் சாதகமாக்கி இந்திய தேசிய முதலாளிகளுக்கும் அமெரிக்க ஏகாதிபத்திய முதலாளிகளுக்கும் இடையே உள்ள முரண்பட்ட நிலையை

தமக்கு சாதகமாக்க முயல்கின்றனர். இவற்றை உணராத சில அமைப்புகள் மேலும் இனவாதத்தையும் போராளிகள் மத்தியில் பிளவுகளையும் ஏற்படுத்த முயல்கின்றன.

எனவே இன்று அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையாகச் செயல்படும் தரகு முதலாளித்துவ நாடான இலங்கையில் அரசியல் தீர்வொன்று ஏற்படுத்தப் படாமல் தொடர்ந்தும் குழப்ப நிலைகளை ஏற்படுத்தி தனது தேசிய முதலாளித்துவத்தை பாதுகாக்க இந்திய அரசு முயல்கிறது. அரசியல் சமூக தீர்வொன்று ஏற்படும் பட்சத்தில் தொடர்ந்தும் இலங்கைத் தரகு முதலாளித்துவ அரசினால் இந்திய தேசிய முதலாளிகள் பாதிப்படைவதும் தவிர்க்க இயலாது என்பது அவர்களுக்குப் புரியும். எனவே தரகு முதலாளித்துவ நாடுகளில் இந்திய தேசிய முதலாளிகள் விரும்பும் தொடர்ச்சியான குழப்ப நிலைகளை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தும் அமைப்பே சரியான முறையில் சர்வதேச அரசியலை பகுத்தாய்ந்துள்ளது என கண்ணுடி எண்ணுகிறது.

## தெற்காசிய சூழ்நிலை

தெற்காசியாவில் முக்கியமாக இந்திய உப கண்டத்தில் பல்வேறு வடிவங்களில் தனது அடக்கு முறைகளை விஸ்தரித்து வரும் ஏகாதிபத்திய முதலாளியான அமெரிக்காவுக்கு எதிராக தரகு முதலாளித்துவ நாடுகளில் பல்வேறு வடிவங்களில் தனது குழப்ப நிலைகளை இந்திய தேசிய முதலாளிகள் ஏற்படுத்தி வருகின்றனர். இக்குழப்ப நிலைகளினூடு இந்தியத் தேசிய முதலாளித்துவ வரலாற்று போக்கினை நிராகரித்து நிலைநிற்க முயல்கிறது. இந் நிலையில்தேசிய முதலாளித்துவத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் அமெரிக்க பொதுச் சந்தையான இலங்கைத் தரகு முவலாளித்துவ அரசுடன் இந்திய அரசிற்கு ஏற்பட்ட முரண்பாட்டை தமிழீழ விடுதலைப் போராளிகள் தமக்கு சாதகமாக பயன்படுத்துகின்றனர். இதன் காரணமாக இந்திய தேசிய முதலாளித்துவ அரசு விரும்பியோ விரும்பாமலோ தமிழீழம் மலர்வது தவிர்க்கவியலாது. இவ்வாறு மலரும் தமிழீழமானது நிச்சயமாக புரட்சிகர சக்திகளால் மட்டுமே நடைமுறைச் சாத்தியமாகும்.

சர்வதேச முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிராக காலனி, அரைக் காலனி நாடுகளில் நடாத்தப்படும் எந்தப் புரட்சியும் இனிமேல் பழைய உலக பூர்சுவா ஜனநாயகப் புரட்சிவகையைச் சேர்ந்ததாக இருக்க முடியாது. அது புதிய உலக பாட்டாளி வர்க்கத்தின் சோசலிசப் புரட்சியின் ஒரு பகுதியாகவே இருக்கும்.

தோழர்: மா ஓ சேதுங்

தோழர் மா. ஓ சேதுங்கின் கூற்றுக்கிணங்க அமையவிருக்கும் தமிழீழமானது முதலாளித்துவம் அற்ற பாதையையே கொண்டிருக்குமென்பது தெளிவாகப் புரிகிறது. எனவே தமிழீழத்தில் அமைய விருக்கும் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு உலகில் அடக்கி ஒடுக்கப்படும் மக்களின் விடுதலைக்காக குரல் எழுப்புவதும் ஆச்சரிமானதல்ல. இந்நிலையில் தமிழீழம் தெற்காசியாவில் புரட்சியை நோக்கி நடைபோடும் புரட்சிகர அமைப்புக்களுடன் தன்னை இறுகப்பிணைத்துக் கொள்வதும் தவிர்க்கவியலாது. இன்று சர்வதேச நாணய சபைக்கும் உலக வங்கிக்கும் கட்டுப்பட்டுள்ள எந்தவொரு நாடும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை முற்றாக நீக்கியதில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கெதிராகவும், அதன் பொருளாதார சுரண்டல் வலையை உடைத்தெறியும் நோக்குடனும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சீரமைக்கும் நோக்குடனும் தெற்காசியாவில் முற்போக்கான குடியரசுகளின் ஒன்றியம் தோன்றுவது நிதர்சனமானது இவ் ஒன்றியத்தில் தமிழீழம் தனது முழுமையான பங்களிப்பைச் செலுத்துவதன் மூலம் பொருளாதார ஏற்றத்தாழ்வற்ற பொதுவுடமை சமுதாயத்துக்கான சோஷலிச ஒன்றியத்தை ஏற்படுத்தும் என கண்ணுடி எண்ணுகின்றது.

இவ்வுலகில் வல்லாதிக்கம் கொண்ட சில வல்லரசுகள் தெற்காசியாவில் குறிப்பாக இந்திய உபகண்டத்திலுள்ள மூன்றும் மண்டல நாடுகளை பொருளாதார ரீதியில் சுரண்ட முற்படுகையில் அதற்கு எதிராக முற்போக்கு எண்ணம் கொண்ட குடியரசுகள் தமது தனித்துவத்திற்கு பங்கம் வராத முற்போக்கு ஒன்றியத்தை உருவாக்கும் பட்சத்தில் தமிழீழம் தனது முழுமையான பங்களிப்பை வழங்கும்.

தோழர் தங்கத்துரை

# தேசமெனும் தகமை
# ஐதீகங்களும் யதார்த்தங்களும்

'தமிழர் பிரச்சினை'யின் குழப்பமான சிக்கல்கள், (தமிழ் சிங்கள) இருவகை இன முற்சாய்வுகளின் அழுத்தங்கள், பாராளுமன்ற அரசியலின் தேவைகள் தேர்தல் கண்ணோட்டம் (நோக்கம்) சார் கருத்து ஆகியவற்றினை எதிர் கொள்ளப்பட்டு தமிழ் சிங்கள இடதுசாரிகளும் 'முற்போக்காளர்களும் வெவ்வேறு நிலையினை மேற்கொள்கிறார்கள். ஒவ்வொருவரும் தத்தமது நிலையே சரியான 'சோசலிச' பார்வை என்று நியாயப்படுத்துகிறார்கள். உண்மையில் தேசிய இனப்பிரச்சினையில் சரியான மாக்சிய நிலைப்பாடு என்ன? தமிழர் பிரச்சினை தொடர்பில் சிந்தக சில விடைகளை அளிக்கிறார்.

மே 15, ஜூன் 1, 15, ஜூலை 1 ஆம் திகதி லங்கா கார்டியன் இதழ்களில் வெளியானதன் தமிழாக்கத்தின் ஒருபகுதி. மிகுதிஅடுத்த இதழில்.

### ஐதீகம் 1

இலங்கை ஒரு தேசிய அரசு.

மாறாக, அது ஒரு பல்தேசிய, அல்லது இன்னும் திருத்தமாக, ஓர் ஈர் தேசிய பூர்சுவா அரசு: தன்னுள் ஒரு (மேலாதிக்கம் பெற்ற) சிங்கள தேசிய இனம், தமிழ் தேசிய இனம், மற்றும் மலையக மக்கள், முஸ்லிம்கள் போன்ற தேசிய இனமாகாத தேசிய சிறுபான்மையினர் பலரை அடக்கியுள்ளது.

### ஐதீகம் 2

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழ் மக்கள் தேசிய இனம் ஆக மாட்டார்கள். ஏனெனில் பிரதானமாக, அவர்களிடம் தேசமெனும் தகமைக்குத் தேவையான இன்றியமையாத முற்தேவையான 'பிரத்தியேகமான பொருளாதாரம்' இல்லாதிருப்பதே.

பெரும்பாலான இடதுசாரிகளினால் கையாளப்படும் முதல்தரமான செப்படிவித்தை இதுவாகும். விஞ்ஞான பூர்வமான சோசலிசத்தின் வரைவிலக்கணம் ஓர் 'பிரத்தியேகமான பொருளாதாரத்தை' குறிப்பிடவேயில்லை. உண்மையில் அது குறிப்பிடுவது, ஓர் பொதுப் பொருளாதார வாழ்க்கையையே. இரண்டுக்குமிடையில் பாரிய வேறுபாடு உண்டு.

தன் புகழ்மிக்க, எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணத்தில் ஸ்ராலின் கூறுவது: "ஓர் தேசிய இனம் என்பது, பொது மொழி, நிலப்பரப்பு, பொருளாதார வாழ்க்கை, மனோதத்துவ உருவாக்கம் என்பவற்றைக் கொண்டு இவற்றைத் தன் பொது கலாச்சாரத்தில் பிரதிபலிப்பதும் வரலாற்று ரீதியாக உருவாக்கப்பட்டதுமான ஓர் உறுதியான சமூகத்தைச் சேர்ந்த மக்கள் ஆகும்." பொருளாதார காரணியைப் பற்றிப் பேசும்போது, ஸ்ராலின் தன்பிறப்பிடமான ஜோர்ஜியாவை சுட்டிக்காட்டி கூறுவது என்னவென்றால் ஜோர்ஜியர் ஓர்பொது நிலப்பரப்பையும் மொழியையும் கொண்டிருந்தபோதும் 19 ஆம்நூற்றாண்டின் பிற்பகுதிவரை இவர்கள் ஓர் தேசிய இனமாக ஏற்கப்படாததன் காரணம் பொருளாதார இணக்கமற்ற சிறு பிரதேசங்களாக பிரிந்த இவர்களிடம் ஓர் பொதுவான பொருளாதார வாழ்க்கை இருக்காமையே, பல நூற்றாண்டுகாலம் ஜோர்ஜியர் தமக்கிடையே போரிட்டதுமன்றி பேர்சியரையும் துருக்கியரையும் ஒருவர் மேல் ஒருவர் ஏவிவிடுவதன் மூலம் ஒருவரை ஒருவர் சூறையாடினர். பலமுள்ள அரசர் சிலர் சில வேளைகளில் ஏற்படுத்திய மேலோட்டமான ஒற்றுமை ஒரு பொதுவான நிர்வாக அமைப்பை மாத்திரமே கொண்டிருந்தது. ஆனால் இதுகூட விவசாயிகளின் அக்கறையின்மையினாலும் சிற்றரசுகளின் சுய விருப்பங்களா

னும் இலகுவில் உடைந்தது. பொருளாதார பிளவுகளை உடைய ஜோர்ஜியாவில் இதை விட வேறொன்றையும் எதிர்பார்க்க முடியவில்லை. பிரபுத்துவ வீழ்ச்சி நாட்டின் பொருளாதார வளர்ச்சி, தொடர்பு சாதனங்களின் அபிவிருத்தி, முதலாளித்துவத்தின் எழுச்சியுடன் ஏற்பட்ட தொழிற்பிரிவு என்பனவே பிராந்தியங்களின் பொருளாதார பிரிவினைகளை ஒழித்து ஒற்றுமையை ஏற்படுத்தி 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஜோர்ஜியா ஓர் தேசிய இனமாக எழ வழிகோலியது. ஸ்ராலின் முடிவாகக் கூறுவது "பிரபுத்துவ முறையைக் கடந்து முதலாளித்துவம் உருவாக்கிய ஏனைய தேசிய இனங்களுக்கும் இதுவே ஏற்பட்டது. எனவே ஒரு பொது பொருளாதார வாழ்க்கை, பொருளாதார ஒருங்கிணைவு, ஒரு தேசிய இனத்தின் சிறப்பம்சமாகும்."

எனவே தெட்டத்தெளிவாக இருப்பது; பொதுப் பொருளாதார வாழ்க்கை என்பதன் ஒரேயொரு அர்த்தம் பிரபுத்துவம் (அதனுள் அடங்கும் தனித்துவமான தன்னிறைவான கிராம சமுதாயமும்) முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரம், தொழிற்பிரிவு என்பவற்ருல் மாற்றப்பட்டு, பிரதேசத்திற்குத் தேவையான அகநிலை பொருளாதார ஒற்றுமையைக் கொடுப்பது. அடிப்படையில் இந்த நிலைமைதான் அதன் பொது பொருளாதார வாழ்க்கையுடன் வடக்கில் இன்று நிலவுகின்றது. அங்கு நிலவுவது பிரபுத்துவத் தனிமை அல்ல. ஆகவே தமிழர் தேவையான பொருளாதார காரணியை கொண்டிருப்பதோடு ஏனைய சமூக வரலாற்றுப் பண்புகளையும் ஒருசேரப் பார்க்குமிடத்து இவற்றின் அடிப்படையில் அவர்கள் சிங்கள தேசிய இனத்திலிருந்து பிரத்தியேகமான தனித்துவமான ஒரு தேசிய இனம் என்ற வரைவிலக்கணத்தை கொள்கிருர்கள்.

ஐதீகம் 3

தமிழர் பாரபட்சமாக நடத்தப்படலாம் 'இரண்டாம்தர பிரஜைகளாக' இருக்கலாம் ஆனுல் அவர்கள் ஓர் ஒடுக்கப்பட்ட தேசிய இனம் அல்ல.

தேசிய ஒடுக்குமுறை என்ருல் என்ன? விஞ்ஞான ரீதியான சோஷலிசத்தின் கருத்துப்படி; "தேசிய ஒடுக்கு முறை என்ருல் ஒடுக்கப்பட்ட மக்கள் சுரண்டப்படும், களவாடப்படும் அமைப்பு, ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் உரிமைகள் பலாத்காரமாக குறைக்கப்படும் நடவடிக்கைகள் ...இவை கூட்டாக, தேசிய ஒடுக்குமுறை என்று பொதுவாக அழைக்கப்படும் கொள்கையை பிரதிபலிக்கின்றன. (பொல்சேவிக் கட்சியின் 7வது கொங்கிரசில் வழங்கப்பட்ட தேசிய இனப் பிரச்சினை குறித்த ஸ்ராலினின் அறிக்கை)

இந்த வரைவிலக்கணத்தை ஒருவர் பிரயோகித்தால் தமிழர் 1948 இலிருந்து தொடர்ந்து வந்த சிங்கள பூர்சுவா அரசுகளின் தேசிய ஒடுக்குமுறைக் கொள்கைகளால் பாதிக்கப்பட்டவர்கள் என்பது தெளிவாகின்றது. யாப்பில் சிங்களம் மட்டுமே உத்தியோக மொழி. பௌத்தமும் தலையான இடத்தைப் பெறுகின்றது. தேசிய கொடியிலும் இதே நிலைமை காணப்படுகின்றது. சிங்கள மொழிவன்மை பரீட்சையின் தேவை இன்னும் கைவிடப்படவில்லை. சியோனிஸ்டுகளும், தென்னாபிரிக்க வெள்ளை இனவாதிகளும் பாவித்த குடியேற்றத் திட்டமுறையை தமிழரின் பாரம்பரிய தாயகநாட்டின் வளப்பறிப்பும் சனப்பரம்பல் சமநிலையைப் பாதிக்கவும் பாவிக்கப்படுகின்றது. தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள அரச தாபனங்களுக்குக் கூட தொழிலாளர் தேர்ந்தெடுக்கப்படும்போது சிங்களவருக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றன; பொருளாதார அபிவிருத்திக்கான மூலவள ஒதுக்கீட்டில் கூட தமிழ் பிரதேசங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. ஆகையினுல், இப்பகுதிகள் விவசாயம், நீர்ப்பாசனம், கைத்தொழில் போன்ற துறைகளில் குறைவளர்ச்சி நிலையிலேயே இருக்கின்றன. வடக்கு, பெரும்பாலும் சிங்கள பூர்சுவா அரசின் சிங்கள நிர்வாக அமைப்பால் ஆளப்படுவதால், இது ஒரு அந்நிய நிர்வாகம் ஆகும். ஒரு பிரிகேடியரை இணைப்பதிகாரியாகக் கொண்ட பலத்த இராணுவ பிரசன்னம் இங்கு காணப்படுகிறது. தரப்படுத்தல், மாவட்ட ரீதியிலான 'கோட்டா' முறை என்பன கல்வியில் சமத்துவ வாய்ப்பினை மறுதலிப்பதோடு இதனுல் உத்தியோக வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன. சிங்கள பகுதி

களிலுள்ள பாடசாலைகளில் தமிழ் மொழிப் பிரயோக பிரேரசன் கூட்டப்படுவதால் தமிழ்ப் பிள்ளைகள் சிறப்பாக கற்க உதவும் அவர்களது 'தாய்மொழி' நசுக்கப்படுவதுடன் இது ஓர் பலாத்காரமான காலசார திணிப்பாகவும் அமையும்

ஐதீகம் 4

**தமிழர் சிங்கள ஏகாதிபத்தியத்தினால் ஒடுக்கப்படுகின்றனர்.**

இக்கருத்து தேசியவாத தமிழ் அரசியல் வாதிகளின் (இளைஞர் பரம்பரையினர் உட்பட பேச்சுகளில் தாராளமாக வெளிவருகின்றது. நுணுக்கமான விஞ்ஞான ரீதியான (லெனினிய ரீதியான) கருத்தின்படி ஏகாதிபத்தியம் என்பது முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம். இலங்கையில் முதலாளித்துவ பொருளாதாரம் வேறுபடுத்தப்பட முடியாதவாறு வர்த்தக மையங்களின் (உ+ம்: அமெரிக்கா, மேற்கு ஐரோபபா, யப்பான்) ஏகாதிபத்திய பொருளாதாரத்தைச் சார்ந்து அமைந்திருப்பதோடு சர்வதேச முதலாளித்துவ அமைப்பின் ஓர் புற எல்லை அங்கமாகவும் செயற்படுகின்றது. ஆகவே சார்புநிலை குறைவிருத்தி முதலாளித்துவமாகிய எமது பொருளாதாரம் ஏகாதிபததியம் (அதாவது முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம்) என வகைப்படுததபபடுவது இயலாது. ஆகவே லெனினின் கருத்து நோக்கில், சார்புநிலை சிங்கள பூர்சுவாவை ஏகாதிபத்தியம் என அழைக்கமுடியாது.

தமிழ் மக்கள், ஆளும் சிங்கள பூர்சுவாவாலும் அதன்அரசுயந்திரத்தாலும்தேசிய ரீதியாக? ஒடுககப்படுகிறார்கள். மேலும் சிஙகள மக்கள் சமூக ரீதியாக தஙகள் சொந்த (அதவாது சிங்கள) பூர்சுவாக்களால் தேசிய ரீதியாக ஒடுக்கப்படுவதில்லை. அதாவது சிங்கள தொழிலாளியும், விவசாயியும் சிங்களவன் என்ற காரணத்தால் அல்ல; தொழிலாளி விவசாயி என்ற காரணத்தால் ஒடுககப்படுகின்றனர்; ஆனால் தமிழ் தொழிலாளரோ தமிழன் என்ற காரணத்தாலும் தொழிலாளர் என்ற காரணத்தாலும் ஒடுக்கப்படுகின்றார்கள். ஆனால் தமிழ் தொழிலாளர்—விவசாயிகள் தங்கள் சொந்த தமிழ் பூர்சுவாக்களாலும் ஒடுக்கப்படுவது உண்மை. எனினும் தற்போதைய போராட்டகட்டத்தில் அவர்களது அடிப்படை முரண்பாடு தமிழ் பூர்சுவாக்களுடன் அல்ல தற்போது தமிழரின் முக்கிய எதிரி அவர்களது புற எதிரியான சிங்கள பூர்சுவாவும் அதன் அரச அமைப்பும் [இதை 'சிங்கள ஏகாதிபத்தியம்' என்றோ 'சிங்கள மக்கள்' என்றோ நாம் தப்பாக தன்மைப்படுத்தக் கூடாது.) நீயூபர்களும் வியட்னாமியரும் சிறந்த உதாரணங்கள்: இவர்கள் தம் போராட்டத்தின போது ஒரு போதும் அமெரிக்க ஏகதிபத்தியத்துடன் அமெரிக்க மக்களைச் சேர்க்கவில்லை. (கலக்கவில்லை) இந்த அடிப்படை பாகுபாடு அவசியமாக விருப்பதன் காரணம; பெரும்பான்மை இன (அதாவது இந்த சிங்கள இன) பாட்டாளி வர்ககத்துடன் தோழமையை வளர்ககக் கூடிய தாய் அமைவது.

ஐதீகம் 5

**தமிழருக்கு சில சலுகைகளை வழங்குவதன் மூலம் தேசிய இனபபிரசசினையை தீர்த்து விடலாம்.**

சலுகை என்ற சொல்லே பிரச்சினை பிழையாக விளஙகப்பட்டிருபபதை எடுத்துககாட்டுகிறது. பிரச்சினை சலுகைகளை வழஙகுவது அல்ல; ஆனால் தமிழரின் தேசிய ரீதியான, ஜனநாயகரீதியான உரிமைகளைக் குறிததது.

ஐதீகம் 6

**யாப்பில் ஏற்படுத்தும் திருதங்களூடாக தேசிய இனப்பிரச்சினையை தீர்த்துவிடலாம்.**

இப்பிழையான பார்வையை கொண்டவர்களில் கொம்யூனிஸ்ட் கடசியும ஒன்று: இது பாநில சுயாட்சி, மொழி-கலாச்சார கல்வி உரிமைகளையும் உள்ளடக்கிய பல திருத்தங்களை யாப்பில் ஏற்படுத்தும் படி பிரேரித்திருக்கின்றது. ஆனால் விஞ்ஞான ரீதியான சோஷலிஸ்டுகளை பொறுத்தவரையில் ''நிச்சயமாக தேசிய இனப்பிரச்சினையை பொதுப் பிரச்சினையாகிய பாட்டாளிக

ளின் புரட்சியின் ஓர் கூறுகக் கணிக்கும் எவரும் இதை ஓர் யாப்புக்குரிய விடயமாக தாழ்த்திவிட முடியாது. மறுதலையாக தேசிய இனப் பிரச்சினையை பொதுப்பிரச்சினையாகிய பாட்டாளிகளின் புரட்சியில் இருந்து வேறுபடுத்தும் ஒருவரே இதை ஓர் யாப்புக்குரிய விடயமாக சிறுமைப் படுத்த முடியும்'' [ஸ்ராலின்]

ஐதீகம் 7

மொழி, கலாச்சார, கல்வி போன்ற துறைகளில் தமிழருக்கு சம உரிமை வழங்குவதன் மூலம் தேசிய இனப் பிரச்சினையை தீர்த்து விடலாம்,

1964ற்கு முன் ல. ச ச. க. இக்கொள்கையையே கடைப்பிடித்தது; J. V Pயும் இதையொத்த கொள்கையையே கடைப்பிடிக்கின்றது. ஆனால் தேசிய இனப் பிரச்சினையை அரசியல் அதிகாரப் பிரச்சினையிலிருந்து பிரித்து. மொழி, கலாச்சார கல்விப் பிரச்சினைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்துதல் இயலாது பேவர், றென்னர் போன்று ஆஸ்திரிய சமூக ஜனநாயகவாதிகளின் மந்தகுணம் வெளிப்படுவது எதுவெனில், தேசிய பிரச்சினைக்கும் அரசியல் அதிகாரப் பிரச்சினைக்குமிடையே இருக்கும் பிரிக்கமுடியாத தொடர்பை உணராதவர்களாய். தேசிய பிரச்சினையை அரசியலிலிருந்து பிரித்து கலாச்சார கல்விப் பிரச்சினைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தியமையிலேயே'' (J. V· ஸ்ராலின்)

இரண்டாம் அகிலத்தின் சுலோகமான ''தேசிய உரிமைச் சமத்துவம்'' என்பதற்கு மாறாக லெனின் வலியுறுத்தியது ''சுயநிர்ணய உரிமைப் பிரச்சினை பூரணமாக அரசியல் ஜனநாயகத்தின் அம்சத்துடன் தொடர்புடையது அதாவது அரசியல் பிரிவினை சுதந்திர தேசிய அரசுகளை தாபித்தல் போன்றவற்றுடன் தொடர்புடையது. லெனினும், ஸ்ராலினும் சுட்டிக்காட்டியது என்னவெனில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வாக ''கலாச்சார தனித்துவத்தை'' முன்வைத்தல் அரசியல், பொருளாதார அதிகாரங்களை ஆளும் தேசிய இனத்தின் கையிலேயே விட்டு விடுவதாக அமையும் என்பதாகும்.

ரோசா லக்சம்போக்கின் (Rosa Luxemburg) பொருளாதார அணுகுமுறைக்கும் றென்னர், (Renner) ஒட்டோபேயர் OttoBauerபோன்றோரின் சீர்திருத்த அணுகுமுறைக்கும் மாறாக லெனினிய அணுகுமுறை அரசியலையே தேசியப் பிரச்சினைக்கு முக்கிய அம்சமாக அழுத்துகின்றது ''ருசிய பாட்டாளிகளை எதிர் நோக்குவது ஓர் இருதலைப் பொறுப்பு: பொதுவாக எல்லா தேசிய இனங்களுக்கும் உரிய சம உரிமைகளை ஏற்றுக்கொள்வது. அரசியல் ரீதியான சம உரிமைகளை (அதாவது தேசிய இனங்கள் பிரிந்து செல்லும் அல்லது சுயநிர்ணயம் செய்யும் உரிமையை) ஏற்றுக்கொள்வது'' ('தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை;) இந்த இருதலைப் பொறுப்புதான் இன்றும் முற்போக்குவாதிகளை எதிர்நோக்குகின்றது.

ஐதீகம் 8

இடதுசாரி இயக்கம் தமிழரின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் பிரிந்து செல்வதை எதிர்த்து, மாற்றாக பிரதேச சுயாட்சியினைப் பிரேரிக்க வேண்டும்.

இது லெனினிய நிலைக்கு முற்றிலும் மாறானது. மீண்டும் மீண்டும் தெட்டத் தெளிவாக லெனின் கூறியது; சுயநிர்ணய உரிமையை அரசியல் சுயநிர்ணயம், அரசு சுதந்திரம், தனித்த தேசிய அரசாக உருவாக இயங்க இருக்கும் உரிமை என்பவையேயன்றி வேறெதுவுமாகப் பொருள் கொள்ளல் பிழையாகும். ('தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை') உண்மையில் தேசிய சுயநிர்ணய உரிமை என்பது தெளிவற்றது என லெனின் முன்வைத்ததோடு அதற்குப் பதிலாக 'தேசிய இனங்களின் அரசியற் பிரிந்து செல்லும் உரிமை' என்ற உறுதியான பதம் பாவிக்கப்பட வேண்டுமென கூறினார். எனவே இடதுசாரிகள் தமிழர் தம் அரசியல் எதிர்காலத்தை தாமே நிர்ணயிக்கும் 'சுயநிர்ணய உரிமையை' ஏற்றுக்கொள்ளும் அதே வேளை தமிழரின் போராட்டம் பிரதேச சுயாட்சிக்கு அப்பால் செல்லக்கூடாது என நாங்களே நிர்ணயிப்பது கருத்தற்றது! பொதுத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் 57 % தினரும் வடக்கில் 70 % த்தினரும் அரைகுறை, சீர்திருத்தவாத கோரிக்கைகளான சமஷ்டி பிரதேச சுயாட்சி என்பவற்றை நிராகரித்து, பூரண தேசிய விடுதலையை புரட்சிகரமாக கோரும் பொழுது இடதுசாரிகளின் கருத்து எள்ளிநகையாடத்தக்கது.

# நவகாலனித்துவம் - 2

அண்மைக் காலத்தில், குறிப்பாக இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் முதலாளித்துவத்தின் புறவலயத்தின் (Periphery) சமூக, அரசியல் அமைப்புக்களில் பண்பு மாற்றம் ஒன்று ஏற்பட்டது. இதை 'நவகாலனித்துவம்' என்னும் தொடரால் விளக்கலாம். அரசியல் விடுதலை ஆனால் பொருளியல் அடிமைத்தனம்; உலக முதலாளித்துவ அமைப்புடன் மேலும் மேலும் இறுகப் பிணைக்கப்படல்; அரச முதலாளித்துவத்தின் வளர்ச்சி; பல்தேசிய நிறுவனங்களின் ஊடுருவல் ஆகியன நவகாலனித்துவத்தின் முக்கிய அம்சங்கள். காலனித்துவம் மூன்றாம் உலக நாடுகளின் கைத்தொழில் வளர்ச்சியை நசுக்கியது நவகாலனித்துவமோ மூன்றாம் உலகின் கைத்தொழில் மயமாக்கல் பற்றித் தம்பட்டம் அடிக்கிறது சிங்கப்பூர், தைவான், சீனா, ஹொங்கொங், தென்கொரியா என்னும் நால்வர் குழு (Gang of Four) ஆசியப் பிராந்தியத்தின் முன்மாதிரிகளாகப் பறைசாற்றப்படுகின்றன. இந்த 'விருத்தி'யின் சாரம்சம் என்ன? அண்ட்ரூ குண்டர் பிராங் இதைக் 'குறைவிருத்தியின் விருத்தி' (Development of Underdevelopment) என்று அழகாகக் கூறியிருக்கிறார். இந்த விருத்தியில் ஏகபோக சர்வதேச மூலதனம், உள்நாட்டு முதலாளித்துவமும் கூட்டாளிகள் இன்றைய நிலையில் 'முற்போக்கான' 'தேசிய முதலாளித்துவம்' என்பது வெற்று வார்த்தைகளே. 'அங்ராட்' (UNCTAD) போன்ற அமைப்புக்களில் வெளிப்படும் மூன்றாம் உலகநாடுகளின் 'போர்க்குரல்' வெறும் வாய்ச்சொல் வீரம்தான். நவகாலனிகள் சமூக, பொருளியல் அமைப்புகளை மாற்றாத வரை உலக முதலாளித்துவத்தின் கோரப் பிடியில் இருந்து விடுதலை பெறலாம் என்பது மாயையே. நவகாலனித்துவத்தின் இயல்புகளை தர்க்க முறையில் ஆயும் இக்கட்டுரைத் தொடரின் ஆசிரியர் தயன் ஜயதிலக. தமிழில் தருபவர் டி என். ஜெயக்குமார்.

ஏகாதிபத்தியத்தின் முந்திய கால கட்டத்தில் அரச ஏகபோக முதலாளித்துவம் பிரிட்டன், ஜேர்மனி, யப்பான் போன்ற முதலாளித்துவ மைய நாடுகளில் (Metropolitan Centres) வளர்ச்சி பெற்றது. இத்தகைய வளர்ச்சி இன்று ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்க ஆகிய எல்லைப்புற நாடுகளிலும் (periphery) ஏற்பட்டு வருகிறது இதற்கான பிரதான காரணம் இந் நாடுகளில் உள்நாட்டு முதலாளித்துவ வகுப்பு போதிய மூலதனப் பலம் அற்றதாக இருப்பதேயாகும். எல்லைப்புற முதலாளித்துவத்தின் (Peripheral Capitalisam) வளர்ச்சியில் இருவேறு தெளிவான கட்டங்களை அண்ட்ரூ குண்டர் பிராங் (Andrew Gunder Frank) சமிர் அமின் (Samir Amin) ஆகிய பொருளியலாளர்கள் குறிப்பிட்டுக் காட்டியுள்ளனர். முதலாவது கட்டத்தில் இறக்குமதிப் பதிலீட்டுத் துறைகளில் முதலாளித்துவ கைத்தொழில் வளரும். விவசாயத் துறையிலும் நிலச்சீர்திருத்தம் போன்ற நடவடிக்கைகளால் அரசின் தலையீட்டுடன் முதலாளித்துவ உறவுகள் புகுத்தப்படும். இக்கால கட்டத்தில் தேசிய முதலாளி வர்க்கம் வளர்ச்சிபெறும். இத்தகைய வளர்ச்சியை ஏகாதிபத்திய எதிர்ப்பு அம்சம் உடையது எனக் கூறுதல் இயலாது. உண்மையில் தங்கியிருத்தல் நிலையை (Dependence) இது மாற்றாது. பதிலாக நுகர்பொருள், உற்பத்திப் பொருள் இறக்குமதி செய்யும் நிலையை மாற்றிஇத்தகைய பொருட்களை உள்ளூரிலேயே உற்பத்தி செய்யும் நிலை ஏற்பட்ட போதும் மூலதனப் பொருட்களான யந்திரம், உபகரணம் மூலப்பொருள் ஆகியவற்றை வெளியில் இருந்து இறக்குமதி செய்யும் நிலை உருவாகிறது. இக்காரணத்தால் தங்கியிருத்தல் நிலையில் இருந்து மீட்சி கிடைப்பதில்லை. இத்தகைய இறக்குமதிப் பதிலீட்டுத் தொழில்கள் நவகாலனித்துவத்தின் முதலாளித்துவ வளர்ச்சியின் அடுத்த கட்டத்திற்கு வழிசமைக்கிறது. எல்லைப்புற முதலாளித்துவ நாடுகளின் கைத்தொழில்

உற்பத்திகள் முதலாளித்துவ மையங்களிற்கு ஏற்றுமதி செய்யப்படுவதே இந்த இரண்டாம் கட்டம். இது சர்வதேச ரீதியில் முதலாளித்துவ தொழிற்பிரிவினை ஒன்றை உருவாக்குகிறது. மூன்றும் உலகு எனக் கூறப்படும் நாடுகளில் மூலதனச் செறிவுள்ள கைத்தொழில் உற்பத்தி பல்தேசிய நிறுவனங்களின் ஆதரவின் கீழ் வளர்ச்சி பெறுகிறது 'இறக்குமதிப் பதிலீட்டுத் தொழில' என்ற கொள்கை மாறி 'திறந்த பொருளியல்' என்னும் புதிய கொள்கை தோன்றுகிறது. பூர்ஷ்வா அரசின் மீது தனியார் துறை ஏகபோக மூலதனம் தனது மேலாதிக்கத்தைச் செலுத்தத் தொடங்குவதோடு உள்ளூர் முதலாளிகள் உள்நாட்டுச் சந்தைக்காக மட்டும் உற்பத்தி செய்பவர்களாக இல்லாது ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்வர். உள்ளூர்ச் சந்தை மட்டும் அவர்களின் இலாபப் பசிக்குத் தீனிபோட முடியாத நிலை தோன்றுகிறது. அரசாங்கத்தின் ஆதரவுடன் இறக்குமதிப் பதிலீட்டுத் தொழில்கள் மூலம் தன்னைப் பல படுத்திக் கொண்ட தனியார் துறை, இதுவரை அரசுடமையாக இருந்த தொழிற்துறைகளையும் ஊடுருவ ஆரம்பிக்கிறது. சர்வதேச ஏகபோக மூலதனத்தின் கூட்டாளியாகவும் அதேவேளை அதற்குத்தான் அடிமை என்பதையும் ஏற்றுக் கொள்ளும், சுதேச முதலாளித்துவம் வெளிநாட்டு மூலதனம், தொழில் நுட்பம், வெளிச்சந்தை ஆகியவற்றிலும் சர்வதேச ஏகபோகங்களின் அனுசரணையுடன் தனக்கு ஒரு பங்கைத் தேடிக்கொள்கிறது. நவகாலனித்துவத்தின் இரண்டாம் கட்டத்தில் வெளிப்படும் அம்சங்கள் இவையே.

ஹம்சா அலவி (Hamza Alavi) என்பாரின் கருத்துப்படி, சர்வதேச மூலதனத்துடன் உள்நாட்டு முதலாளித்துவம் இணைவது தொழிற் துறையின் பண்புமாற்றம் ஒன்றுடன் தொடர்புபட்டுள்ளது. உணவுப் பொருட்கள், எண்ணெய்ப் பொருட்கள், உடுபுடவை, தோற்பொருட்கள் ஆகிய சிக்கலற்ற தொழில் நுட்பம் தேவைப்படும் மென் தொழிற்துறைகளில் ஈடுபட்டிருந்த உள்ளூர் முதலாளித்துவம் முன்னேறிய தொழில் நுட்பமும், நிறுவன முகாமை அமைப்புக்களும் தேவைப்படும் தொழிற்துறைகளுக்குத் தாவும் கட்டத்திலேயே இத்தகைய இணைப்பு அவசியமாகின்றது என அவர் கூறுகிறார். சர்வதேச மூலதனத்தின் உள்ளூர் முகவர்கள் என்ற ஸ்தானத்தை உள்ளூர் முதலாளித்துவம் இக்கட்டத்தில் ஏற்கத் தயாராகின்றது பல்தேசிய நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள், தரகுத் தொழில்கள் கூட்டுமுயற்சிகள் என்பன மேற்கொள்ளப் படுகின்றன 'மூன்றும் உலகின்' தொழிலாளி வர்க்கத்தைச் சுரண்டுவதால் கிடைக்கும் உபரிலாபத்தை இவர்கள் பங்கு போட்டுக்கொள்கின்றனர். உள்ளூர் வங்கி மூலதனமும், நிதி மூலதனமும் நவகாலனிகளின் மூலதனச் சந்தையைத் தம் ஆட்சிக்கு உட்படுத்தி பல்தேசிய நிறுவனங்களுக்கு உள்ளூர் நிதி மூலதனத்தை திரட்டிக் கொடுக்கின்றன. விற்பனை, வரி, ரோயல்டி ஆகிய வழிகளில் கிடைக்கும் வருமானத்தில் உள்ளூர் முதலாளித்துவம் தனது பங்கைப் பேரம் பேசிப் பெற்றுக்கொள்கிறது.

முதலாளித்துவத்தின் புறவலயமான ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய கண்டங்களில் தொழில்துறை வளர்ச்சி பெறுவதற்கு இன்னொரு காரணமும் உண்டு. சூழலை அசுத்தமாக்கும் செயற்கைப் பட்டு (Synthetic textiles) உற்பத்தி போன்ற பல தொழில்களை பல்தேசிய நிறுவனங்கள் இக்கண்டங்களுக்கு மாற்றுகின்றன. இதன் மூலம் சூழல் அசுத்தமாவதை தடுக்கும் வழிமுறைகளை மேற்கொள்வதால் ஏற்படும் பாரிய செலவுகளை நிறுவனங்கள் தவிர்த்துக் கொள்கின்றன. 'வோஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை, யப்பானிய அமைச்சரும், யப்பானிய பொருளியல் ஆய்வு மையத்தின் முன்னாள் தலைவருமான சபுரு ஒகிட்டாவின் கருத்தொன்றை வெளியிட்டிருந்தது.

"1000 டொலர் அல்லது அதற்குக் குறைந்த தலா வருமானத்தையுடைய விருத்தியடைந்துவரும் நாடுகள் சூழல் அசுத்தமாதல் போன்ற ஆடம்பர விடயங்களில் அக்கறை செலுத்துதல் இயலாதவிடயம்'

1960 ஆம் ஆண்டு காலமுதல் வெளி முதலீட்டின் தன்மையில் மேற்கூறிய வகையான மாற்றம் ஏற்பட்டு வந்துள்ளது.

தோட்டத் தொழில், சுரங்கம், அகழ்வுத் தொழில்கள், பொதுச்சேவைத் தொழில்கள் ஆகியவற்றில் காலனித்துவ கட்டத்தில் முதலீடுகள் குவிந்திருந்தன. நவகாலனித்துவ கட்டத்தில் தொழில் உற்பத்தித் துறையில் மூலதனம் நகர்ந்து செல்வதை அவதானிக்கலாம். OECD அறிக்கை ஒன்றின்படி (1970) குறைவிருத்தி நாடுகள் எல்லாவற்றிற்குமான மூலதன ஏற்றுமதியின் துறைவாரியான பங்கிடு 1967,1968 ஆம் ஆண்டில் பின்வருமாறு இருந்தது.

| | | |
|---|---|---|
| பெற்றோலியம் | — | 33.5% |
| அகழ்வுத்தொழில் | — | 10 9% |
| கைத்தொழில் | — | 35.0% |
| பிறதுறைகள் | — | 20.6% |

இதே அறிக்கையின் தரவுகளின் படி ஆசிய பசுபிக் பிராந்தியத்தினை தனியாக எடுத்துநோக்கின் கைத்தொழில் முதலீடுகள் 38.5% ஆக இருந்தன. லத்தின் அமெரிக்காவில் கைத்தொழில் முதலீடுகள் 54.5% ஆக இருந்தன. வேறுபல அறிக்கைகளும் இத்தகைய போக்கை நிரூபிக்கின்றன. வாகனங்களைப் பொருத்துதல், பிடவைக் தொழில், பெற்றோலிய இரசாயனத்தொழில்கள், எலக்ரோனிக் தொழில்துறை,உணவுப் பொருட்களைப் பதனிடுதல் ஆகிய தொழில் துறைகள் நவகாலனித்துவத்தின் ஆதரவின் கீழ் பெருகின. இதே போன்று கைத்தொழில் துறையில் தொழிலாளர்களின் எண்ணிக்கையையும் இந்நாடுகளில் கூடி வந்துள்ளது. சோவியத் பேராசிரியர் ஒருவர் மூன்றும் உலக நாடுகளில் கைத்தொழில் துறைத் தொழிலாளர் பெருக்கம் பற்றிய சுட்டெண்களை தமது நூலொன்றில் தந்துள்ளார்.

(1958=100)

1948-72 1963-125 வித்தியாசம் +53

இத்தரவுகள் யாவற்றையும் ஒன்றிணைத்து நோக்கும்பொழுது மூன்றும் உலகில் துரிதமான முதலாளித்துவ கைத்தொழில் விருத்தி ஏற்பட்டுள்ளது என்பது தெளிவு. அதேசமயம் இவ்விருத்தியானது தங்கியிருத்தல் தன்மையுடைய கைத்தொழில் மயமாக்கம் (Industrialization of a dependent Character) என்பதும் அவதானிக்கப்பட வேண்டும். பழமைவாத மார்க்சிஸ்டுகளில் சிலர் இவ்வித கைத்தொழில் மயமாக்கத்தின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டத் தவறியுள்ளனர். அவர்கள் காலனித்துவத்தின் கீழ் இத்தகைய விருத்தி சாத்தியமில்லை எனக் கருதுவர்.

நவகாலனித்துவத்தின் கீழ் ஏற்படும் கைத்தொழில் மயமாக்கலின் விளைவுகள் யாவை? முதலாவதாக மூன்றும் உலகு, உலக முதலாளித்துவ அமைப்பில் புதியதொரு பங்கையும், பாத்திரத்தையும் எடுத்துக் கொள்கிறது. விவசாய மூலப்பொருட்களின் ஏற்றுமதியாளர் என்ற நிலையில் இருந்து மாறி 'விவசாய - கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதியாளன்' என்ற பாத்திரத்தை மூன்றும் உலக நாடுகள் பெறத் தொடங்குகின்றன. அடுத்ததாக உலக முதலாளித்துவ அமைப்பில் முன்னரிலும் பார்க்க கூடிய அளவில் நவகாலனிகள் பின்னிப் பிணைக்கப்படுகின்றன. இதன் விளைவாக இயல்பான, சுயகாலில் நிற்பதான, சுயத்துவம் உள்ள விருத்தி (autocentric Development) என்பது முற்றாகவே இல்லாதொழிகிறது. சுயத்துவமான விருத்தியில் யந்திரம், உபகரணம் போன்ற முதலீட்டுப்பொருள் உற்பத்திக்கும் (Department - I) உணவு, உடை, மருந்து போன்ற நுகர்வுப் பொருள் உற்பத்திக்கும் (Department - II) வேண்டிய கேள்வி உள்ளூர்ச் சந்தையில் இருந்தே எழும் முதலாளித்துவ மையநாடுகளில் இத்தகைய நிலையே இருந்து வந்தது. ஆனால் நவகாலனிகளில் இவ்விரு வகை உற்பத்திகளுக்குமான கேள்வி வெளிச் சந்தையில் கட்டுப்படுத்தப்படுகிறது. 'உற்பத்தி பற்றிய தீர்மானங்கள்' உள்நாட்டில் அன்றி வெளியில் இருந்தே செய்யப்படுகின்றன. நவகாலனித்துவத்தின் கீழ் முதலாளித்துவ உற்பத்தி உள்நாட்டின் தேவைக்காக அன்றி ஏற்றுமதிக்காகவே உற்பத்தியாகிறது. அதேபோன்று உள்நாட்டு நுகர்வுப் பொருட்களின் பெரும் பங்கு வெளிநாட்டில் இருந்து இறக்குமதியாகும். இத்தகைய தங்கியிருத்தலையே சமீர் அமீன் புறவயமாக்கல்' (Extraversion) என்னும் சொல் மூலம் விளக்குகிறார். உண்மையில்

புறவயமாக்கல் தான் நவகாலனித்துவத்தின் வெளிப்படையாகத் தெரியும் சிறப்பியல்பு. உலக முதலாளித்துவத்துடனான பிணைப்பு மேலும் மேலும் இறுகுவதால் நவகாலனிகள் ஏற்படக்கூடிய எந்த விருத்தியும் தங்கியிருத்தல் தன்மையுடைய விருத்தியாகவே இருத்தல் முடியும். ஆகவே, மூலவளங்களைப் பெரிய அளவில் உடைய ஈரான், இந்தியா போன்ற பெரிய நாடுகளைத் தவிர்த்து ஏனைய மூன்றாம் உலக நாடுகளில் 'தேசிய முதலாளித்துவம்' ஒன்று உள்ளதென்ற பேச்சில் அர்த்தம் இல்லை.

மூன்றாம் உலக நாடுகளில் நவகாலனித்துவத்தின் கீழ் சுதந்திரம், இறைமை என்பன பறித்தெடுக்கப்பட்டுவிட்டன. அரசாங்கங்களின் பொருளியல் கொள்கைகளும், திட்டங்களும் இந்நாடுகளில் பலம் பெற்றுள்ள முதலாளி வர்க்கங்களின் அபிலாசைகளை வெளிப்படுத்துகின்றன. இவ்வரசாங்கங்கள் முதலாளித்துவ விருத்தி, வெளிநாட்டு மூலதனத்தை தாராளமாக இறக்குமதி செய்வதால் தான் முடியும் என்பதை உணருகின்றன. ஏனெனில் நாட்டில் வறுமை நிலவுகின்றது. மக்களின் சேமிப்பு ஆற்றல் குறைவு. இதனால் முதலீடுகளை உள்நாட்டில் திரட்டுதல் இயலாது.

ஏ. ஜி. பிராங் கூறியிருப்பது போல் "லத்தின் அமெரிக்காவின் இன்றைய பொருளியல் நிலையில் உள்நாட்டு மூலதனம் மிகவும் அருந்தலாக உள்ளது. இந்நாடுகளின் அரசியல் நிலையை எடுத்து நோக்கின் வெளிநாட்டு மூலதனம் 'நல்வரவு' கூறி வரவேற்கப்படுகிறது.
[லத்தின் அமெரிக்கா: குறைவிருத்தியா அல்லது புரட்சியா என்னும் நூல்]

இக் கூற்று லத்தின் அமெரிக்காவிற்கு மட்டுமல்ல மூன்றும் உலக நாடுகள் முழுமைக்குமே பொருந்தும். "தமது வர்க்கத்தின் லாபத்திற்கு ஆபத்து ஏற்படும்போது பூர்ஷுவாக்கள் தமது சொந்த நாட்டு மக்களின் நலன்களுக்கு எதிராக தமது நாட்டையே வெளிநாட்டவர்க்கு விற்கப் பேரம் பேசுவார்." (தொகுப்பு நூல்கள் தொகுதி 28, பக். 17-34) என்னும் லெனின் கூற்று என இது நிரூபிக்கிறது.

மேற்குறித்த பொருளியல் அம்சத்தை விட இன்னோர் சமூக அரசியல் அம்சத்தையும் நாம் கவனித்தல் வேண்டும். அது யாதெனில் உள்ளூர் முதலாளிகள் முதலாளித்துவ மைய நாடுகளின் பூர்ஷுவாக்களின் அடிமைகளாகின்றனர். சுதந்திரம், தாய் நாடு, மொழி, தேசிய இனம் என்பவற்றின் நலன்களுக்கு துரோகம் செய்யும் அளவிற்கு எத்தனை முறைகள் பூர்ஷ்வாக்கள் சென்றனர் என்பதை பாட்டாளி வர்க்கத்தினரான நாம் அறிவோம் புரட்சிகரப் பாட்டாளிகளுடனான மோதல் வரும்போது அவர்கள் இதற்கு தயங்கமாட்டார்கள்" என லெனின் (எமது திட்டத்தில் தேசிய இனப்பிரச்சினை - 1903) கூறினர். இதில் இருந்து நாம் கண்டுகொள்ளக் கூடியது யாதெனில் ஏகாதிபத்தியம், முதலாளித்துவம் ஆகியவற்றிற்கு எதிரான போராட்டத்தில் தேசிய முதலாளிகள் தொழிலாளி வர்க்கத்தின் நேச சக்தியாக இருத்தல் முடியாது எனபதே. ஸ்டாலின் 1952-ல் கூறியது போன்று முதலாளிகள் 'நாட்டின் இறைமையையும், தேசிய நலனையும் டொலர்களுக்கு விலை பேசி விற்றனர்; இச் சூழ் நிலையில் தேசிய முதலாளி வகுப்பின் ஆட்சி என்னும் கருத்து பொருத்தமற்றது. உலக முதலாளித்துவ அமைப்புடனான இறுக்கம் வலிமை பெற்றுள்ள நிலையில் சுதந்திரமான தேசிய முதலாளித்துவம் இல்லை ஆதலால் தேசிய முதலாளித்துவ வகுப்பு தேசிய நலன்களை உண்மையில் பிரதிநிதித்துவப்படுத்துதல் இயலாது. ஒரு நவகாலனியின் முதலாளித்துவ வகுப்பினரினுள் பல்வேறு உட்பிரிவுகள் இருக்கலாம். இவற்றுள் நடுத்தர முதலாளிகள் ஆட்சி அதிகாரத்தை தம்பிடியுள் வைத்துள்ள பெருமுதலாளிகளில் இருந்து வேறுபட்ட உட்பிரிவாக இருக்கலாம். இவ்வகையில் ஆட்சிஅதிகாரம் செலுத்தாத முதலாளிகள் (Non ruling bourgeois fractions) இருத்தல் கூடும். ஆனல் 'தேசிய முதலாளித்துவ ஆட்சி' (Ruling National bourgeois) என்னும் தொடர் யதார்த்த நிலைமைகளுக்குப் பெருத்தமற்றது.

—(தொடரும்)

★

# சீக்கியர் பிரச்சினையும் இந்திரா காங்கிரஸும்

—த. குமார்—

எத்தகைய சூழ்நிலையில், எத்தகைய தேவையின் பொருட்டு எவ்வாறு சீக்கியர் பிரச்சினையினை இந்திரா காங்கிரஸால் கையாளப்பட்டது என்பதை விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

பொதுவாச் சொல்வதாயின் இந்தியா சுதந்திரமடைந்ததிலிருந்து இற்றைவரை அது ஒரு கட்சியினதும், ஒரு குடும்பத்தினதும் ஆட்சியின் கீழ் இருந்து வருகின்றதென்று கூறலாம். அந்த ஒருகட்சி காங்கிரஸ், ஒரு குடும்பம் என்பது நேரு குடும்பம். அவ்வப்போது காங்கிரஸில் சில பிளவுகள் ஏற்பட்டு வந்தபோதிலும் 1947 ஆம் ஆண்டிலிருந்து 1977ஆம் ஆண்டுவரை காங்கிரஸ் ஆட்சியில் இருந்தது. ஜவகர்லால் நேருவின் மரணத்தைத் தொடர்ந்து 1964–66வரை லால்பகதூர் சாஸ்திரி என்பவர் பிரதமரானார். 1966ஆம் ஆண்டில் சாஸ்திரியின் மரணத்தைத் தொடர்ந்து இந்திராகாந்தி பிரதமரானார். 1977ஆம் ஆண்டு ஜனதாக் கட்சியினால் இந்திராகாந்தி தோற்கடிக்கப்பட்டார். இந்த ஜனதாவின் ஆட்சி 1979 வரைதான் நீடித்தது.

1977 ஆம் ஆண்டு இந்திராகாந்தியும் அவரது கட்சியும் பெரும் தோல்வியைத் தழுவுவதற்கு பெரும் காரணமாய் அமைந்தது 1970களின் மத்தியில் அவசரகாலச் சட்டத்தின் கீழான இந்திரா காங்கிரஸின் அனர்த்தங்களேயாகும். இந்திராகாந்தியை ஒரு எதேச்சாதிகாரியாக அந்தக்காலம் படம் பிடித்துக் காட்டியது.

ஜனநாயக விரோதச் செயல்களை, உள்நாட்டு ரீதியாக இந்திரா காந்தியின் எதேச்சாதிகாரத்தைக் கண்டு மக்கள் மிகவும் கொதிப்படைந்தனர். பரம்பரைச் செல்வாக்கையும் மீறி இந்திரா காந்தியைத் தூக்கிஎறிந்தனர். கீழைத்தேசங்களைப் பொறுத்தவரையில் பரம்பரைச் செல்வாக்கு அரசியலில் இன்னும் ஓர் முக்கிய அம்சமாகத் நீடித்து வருகின்றதென்பதை நாம் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படியான நிலையில் மோதிலால்நேரு, ஜவகர்லால்நேரு, இந்திராகாந்தி என்ற இந்த நேருகுடும்பம், அதுவும் இந்தியா சுதந்திரமடைந்த காலத்திலிருந்து ஆயுட்காலம் பிரதமராய் இருந்தவரும் இந்திய மக்களால் "ஆசிய ஜோதி" எனப் போற்றப்பட்டவருமான அந்தநேருவின்பெயரால் ஆட்சிப்பீடமேறிய இந்திராகாந்தி அந்தப் பரம்பரையையும் மீறித் தூக்கியெறியப்பட்டார் என்றால் இந்திய வரலாற்றில் 1977ஆம் ஆண்டு தோல்வி ஓர் சின்னவிடயமில்லை.

பஞ்சாபில் அகாலிதள் ஆட்சிப் பீடத்தில், மத்தியில் ஜனதாவுடன் அகாலிதள் கூட்டு. இந்தநிலையில் அகாலிதள் இந்திரா காங்கிரஸின் எதிரியாக அமைந்தது. அகாலிதள் ஆட்சியைப் பலவீனப்படுத்துவதன் மூலம் ஜனதாவையும் பலவீனப்படுத்தலாம் என்ற நோக்கில் இந்திராகாங்கிரஸ் அகாலித்தள்ளிற்கு எதிரான சகல சாத்தியமான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவந்தது.

இந்த நிலையில் அகாலிதள் கட்சியை வீழ்த்துவதற்கான தீவிர மதவாதியாகிய பிந்திரன்வாலே எனப்படும் ஓர் பாத்திரத்தை (காயை) இந்திராகாந்தி தெரிவு செய்தார். இந்தக் காயை நகர்த்தும் பொறுப்பை இந்திராவின் இளையமகன் சஞ்சை காந்தி மேற்கொண்டார்.

★ [redacted]

தளிர் ஆனி-ஆடி 1985 இதழில்' ஹர்த்தால்-ஒரு கருத்து' என்ற பகுதியில் 23-ம் பகுதியை, 25-ம் பகுதியாகவும், 'அண்மையில் தமிழ்ப் பகுதிகளில் கலை, கலாச்சார நிகழ்ச்சிகள்' என்ற பகுதியில் உருவம், உள்ளடக்கம் என்ற சிறு அம்சங்களை என்பதை, இரு அம்சங்களாகவும் கொள்ளவும். இவ் அச்சுப்பிழைகளுக்காக வருந்துகிறோம்!

ஆயுதரீதியாக பிந்திரன்வாலே வளர்வதன் மூலம் மிதவாத அகாலிதள் படிப்படியாகத் தனது செல்வாக்கை மக்கள் மத்தியில் இழக்கும். இந்தரீதியில் பிந்திரன்வாலே ஆயுதரீதியாக வளர்வதற்குப் பின்னணியாக இந்திரா காங்கிரஸ் செயற்பட்டது. சிரோமணி குருத்வாராப் பிரபந்தக் கொமிட்டித் தேர்தலில் இந்திராகாங்கிரஸ் பிந்திரன்வாலே குழுவினருக்கு ஆதரவளித்தது. 1979ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் பிந்திரன்வாலே இந்திரா காங்கிரஸிற்கு ஆதரவாகத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். சுருக்கமாகச் சொல்வதாயின் இந்திராவின் தொட்டிலில் பிந்திரன்வாலே வளர்ந்தார்.

ஜனதாக்கட்சி தனது மூன்றாண்டு ஆட்சிக் காலத்தில் அடித்த குத்துக்கரணங்களினாலும், கட்சிக்குள் ஏற்பட்ட பிளவினாலும் இதனால் ஆட்சியில் ஏறபட்ட ஸ்திரமின்மையாலும் மக்கள் ஜனதாக்கட்சியின் மீது வெறுப்படைந்தனர். ஒரு மாற்றுக்கட்சியில்லாத சூழ்நிலையில் இந்திராகாந்தி மேடைக்கு மேடை தன்கடந்தகாலத் தவறுகளை மன்னித்து விடுமாறு அழுதுபுலம்பி வேண்டியமையாலும் இந்திரா காங்கிரஸ் 1979 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் வெற்றிபெற்றது. இந்துக் கலாச்சாரத்தில், இந்திய புராண இதிகாசங்களில் பெரும் கொடுமைகளை இழைத்த அரக்கர்களும், இராட்சதர்களும் தமது தவறை உணர்ந்து கடவுளிடமும், தர்மவான்களிடமும் நண்பர்களாக்கப் படுவதாக கதைகள் புனையப்பட்டுள்ளன. அத்தகைய கலாச்சார மரபைக் கொண்ட மக்கள் இந்திராகாந்தியையும் மன்னிடபார்கள் என்ற கணிப்பீடு அரசியல் அரங்கில் இருந்தது. எப்படியோ ஜனதாக் கட்சிக்குள் இருந்த குழப்பம், அதன் தவறுகள், அதன் இயலாமை, மக்களிடம் இந்திராகாந்தியின் மன்னிப்புக்கோரல் ஆகிய அம்சங்கள் அனைத்தும் இணைந்து இந்திராகாங்கிரஸை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவந்தது.

இந்திரா காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்த பின்பும் பிராந்தியக்கட்சியாகிய அகாலிதளை பலவீனப்படுத்துவதற்கு தொடர்ந்து பிந்திரன்வாலேயை இந்திராகாங்கிரஸ் பயன்படுத்தவிருந்தது. இந்திரா காங்கிரஸால் வளர்க்கப்பட்ட பிந்திரன்வாலே இந்திராகாங்கிரஸின் கட்டுப்பாட்டை மீறிச் செயற்படத் தொடங்கினார். சீக்கியரிற்கிருந்த அடிப்படையான பிரச்சினைகள் பிந்திரன்வாலே தொடர்ந்து நின்றுபிடிப்பதற்கான தளத்தைக் கொடுத்தது.

சீக்கியப் பிரச்சனையின் சில எளிமையான அம்சங்களை மட்டும் நோக்குவதன் மூலம் அவர்களது பிரச்சனையின் நியாயங்களை நாம் புரிந்து கொள்ளலாம். பிரித்தானியர் ஆதிக்கத்தின்கீழ் பஞ்சாப் மாநிலத்தின் தலைநகராய் இருந்தது லாகூர் ஆகும், பிரித்தானியரிடமிருந்து இந்தியா சுதந்திமடையும்போது இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் என்னும் ஓர் நாடு பிரிந்தது. அவ்வாறு இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரியும் போது பஞ்சாப்பின் ஒரு பகுதி பாகிஸ்தானுடன் இணைந்தது. அவ்வாறு இணையும்போது பஞ்சாப்பின் தலைநகராகிய லாகூர் பாகிஸ்தான் பகுதியாகிறது. இந்த நிலையில் பஞ்சாப்பிற்கு ஓர் திட்டமிட்ட புதிய தலைநகரம் நிர்மாணிக்கப்பட்டது. அவ்வாறு திட்டமிட்டு ஸ்தாபிக்கப்பட்ட புதிய தலைநகரம் சண்டிகார் நகராகும். இத்தலைநகரை நிர்மாணித்து முடிக்க ஒன்பது ஆண்டுகள் சென்றன (1947-56). பஞ்சாப் மாநிலத்திலிருந்து ஹிந்தி மொழி பேசும் பகுதி ஹரியானா என்ற பெயரில் ஓர் புதிய மாநிலமாக (1966ல்) பிரிந்தது, அப்போது ஹரியானா மாநிலத்திற்கான தலைநகரம் பற்றிய பிரச்சினை எழுந்தது, சண்டிக்கார் நகரம் பஞ்சாப்பிற்கும், ஹரியானாவிற்கும் நடுவேயுள்ள ஓர் இடமாகும். இரு பகுதியினரும் இதற்கு உரிமை கோரினர் ஆனால் சண்டிக்கார் பஞ்சாப்பிற்கே உரியதென்றும், ஹரியானாவிற்கென ஓர் புதிய தலைநகரம் நிர்மாணிக்கப்படுமென்றும் அவ்வாறு நிர்மாணிக்கப்படும்வரை சண்டிக்கார் இரண்டு மாநிலத்திற்குமான பொதுவான தலைநகரமாக இருக்குமென்றும் 1969 ஆம் ஆண்டு ஒப்புக்கொள்ளப்பட்டு, சண்டிக்கார் மத்திய அரசாங்கத்தின் மேற்பார்வையின் கீழான பிரதேசமாக ஆக்கப்பட்டது. 1975 ஆம் ஆண்டளவில் ஹரியானாவிற்கு தனியான ஓர் புதிய

தலைநகரம் நிர்மாணித்து முடிந்து விடுமென்றும் இவ்வாறு முடிந்தும் சண்டிகார் பஞ்சாப்பிற்கே பூரணமாகச் சேரவேண்டிய பகுதியென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. சுக்னு ஏரி சண்டிகார் நகருக்குரியது. எனவே சண்டிகார் பஞ்சாப் மாநிலத்திற்கு உரியதாயின் சுக்னு ஏரியும் பஞ்சாப்பிற்கே உரியதென்பதில் வாதப்பிரதிவாதங்களுக்கே இடமற்றதாகும்.

1957ஆம் ஆண்டு வரையும் ஹரியானுவிற்கு ஓர் புதிய தலைநகரைக் கட்டி முடிக்காத பொறுப்பு பஞ்சாப் மாநிலத்தைச் சார்ந்ததல்ல அது மத்திய அரசாங்கத்தையும் ஹரியானு மாநிலத்தையும் சார்ந்த விடயமாகும். இந்த நிலையில் ஹரியானுவிற்கு ஓர் தலைநகரம் கட்டிமுடிக்காலென்ன, முடிக்காது விட்டாலென்ன பஞ்சாமியர் சண்டிகாரை தமது தலைநகரமாக்குமாறு கோருவது எந்தவகையிலும் தவறல்ல. 19 5ஆம் ஆண்டளவில் சண்டிகாரை பஞ்சாப்பிற்கு உரியதாக்காதது தான் இங்குள்ள தவறுகும். இது நிறைவேற்றப்படாத தோடுமதம், பொருளாதாரம் சார்ந்த வேறுபல அதிருப்திகளும் சேர்ந்து சீக்கியர் பிரச்சினை வளர்ச்சி அடைவதற்கான புறவலயச்சூழலை உருவாக்கியது.

சீக்கியரின் இத்தகைய உரிமைகளையெல்லாம் வழங்க இந்திரா காங்கிரஸ் மறுத்தது. அகாலிதள்ளுடன் ஒப்பந்தம் செய்து இப்பிரச்சினையைத் தீர்த்து வைத்தால் அகாலிதள்ளின் கை பஞ்சாப்பில் ஓங்கிவிடுமெனக் கருதி இந்திராகாந்தி அகாலிதள்ளை ஏமாற்றி வந்தார். 1982 நவம்பர் மாதம் அகாலிதள்ளுடன் ஓர் குறைந்தபட்ச ஒப்பந்தத்திற்கு ஆட்சியாளர் வந்த போதிலும் அதே விதத்தில் இந்திராகாந்தியால் அது இறுதியில் முறிக்கப்பட்டது. இவ்வாறு நவம்பர் மாதத்தில் இருதடவைகள் இவை நிகழ்ந்தன. 1983 பெப்ரவரியில் மீண்டும் அகாலிதள்ளுடன் பேச்சுவார்த்தை. சண்டிகார் நகரை பஞ்சாப்பிற்கு வழங்குவதனல் பஞ்சாப்பிலுள்ள ஹிந்தி மொழிபேசும் சில பகுதிகள் ஹரியானுவுடன் சேரவேண்டுமெனவும், அத்துடன அபோகர், பஜில்கான் பிரதேசங்கள் ஹரியானுவுடன் இணைக்கப்பட வேண்டுமென்றும் இந்திரா வாதிட்டார். பஞ்சாப்பின் ஹிந்தி மொழி பேசும் சில பகுதிகள் ஹரியானுவுடன் இணைவதை அகாலிதள் ஒப்புக் கொண்ட போதிலும் அபோகர், பஜில்கான் பிரதேசங்களை விட்டுக் கொடுக்க அகாலிதள் உடன்படவில்லை. இதில் பேச்சுவார்த்தையை முறிப்பதற்காக இந்திராகாந்திதான் விடாப்பிடியாக இனப்பிரச்சினையை உருவாக்கினர். அகாலிதள் தொடர்ந்தும் சமரச முயற்சியில் அக்கறை கொண்டது. 1983 ஏப்பிரல். 1983 யூன் மாதங்களில் அகாலிதள் இந்திராகாந்தியுடன் சில உடன்பாட்டிற்கு வந்தபோதிலும் தீவிரவாதிகள் ஒப்புக்கொண்டாற்தான் அகாலிதள்ளுடன் தான் உடன்பாட்டிற்கு வரமுடியுமெனக்கூறி மிதவாதிகளை மீண்டும் இந்திரா தோற்கடித்தார். இந்திராவால்

## ✻ மனிதருள் மாணிக்கம்

காலம்:- 9-9-1985
நேரம்:- பிற்பகல் 7 மணி.
இடம்:- நல்லூர் திருவிழாக்காக போக்குவரத்து தடைசெய்யப்பட்ட வீதியில்

யாழ் பல்கலைக்கழக கலாச்சாரக் குழுவினர் விடுதலைப் பாடல்களை பாடிய வண்ணம். மக்களிடம் நிதி சேகரித்துக் கொண்டு வந்தனர். பக்தர்கள் சிலர் தம் மாலியன்ற உதவியைச் செய்ய, பலர் அவர்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.

வீதியின் ஓரத்தில் மெலிந்த உருவம்; அழுக்கேறிய கிழிந்த உடை; நீண்ட நரைத்த தாடி; செம்பாடு படிந்த தலைமுடி; ஒரு கையில் ஊன்றுகோல்; மறு கையில் நெழிந்த பாத்திரம்; வயது சுமார் 70 இருக்கும்: பெயர், ஊர் தெரியாது. தனது பசியைப் போக்க அந்த வீதிகளில் பிச்சை எடுப்பவர். எழும்பி வந்து தனது நெழிந்த பாத்திரத்திலிருந்த சில சில்லறைகளை எடுத்து கலாச்சாரக் குழுவினரின் உண்டியலுக்குள் போட்டு விட்டு மீண்டும் ஓரத்தில் போய் அமர்ந்தார்.
—அவ்வளவும் தான்!

வளர்க்கப்பட்ட தீவிரவாதிகள் சமரசத்தை ஏற்கமாட்டார்கள் என்பது இந்திராவிற்கு தெரியும்.

இந்திராவால் வளர்க்கப்பட்ட தீவிர வாதிகள் இந்திராவையும் மீறிச் செயற்ப டுபவர்களானுர்கள். இந்தியாவை சின்ன பின்னப்படுத்த வேண்டுமென்ற எண்ணத் தைக் கொண்டிருந்த அமெரிக்கா, பாகிஸ் தான் என்பன சீக்கியத் தீவிரவாதிகளைத் தமக்குச் சாதகமாய் பயன்படுத்த முற் பட்டனர். நேரடியாக இந்தியாவுடன் மோ தாமல் அமெரிக்கா சீக்கியத் தீவிரவாதிக ளுக்கு ஆதரவளித்தது. சீக்கியத் தீவிரவா திகள் இந்திராவின் கைப்பொம்மையாகித் தமது நியாயமான போராட்டத்தை கெடுத் தார்களோ, அதே போல அமெரிக்காவின தும், பாகிஸ்தானதும் கைப்பொம்மைகளா கித் தமது போராட்டத்தை ஓர் பயங்கர வாதமாக வெளிப்படுத்திவிட்டார்கள். சீக்கியரின் பிரச்சினைகள் நியாயமானது, ஆனல் சீக்கியத் தீவிரவாதிகள் ஒவ்வொரு கட்டத்திலும் தமக்குத்தாமே குழிபறித்தி ருக்கிறுர்கள். முதலாவதாக இந்திராவின் உள்நாட்டு அரசியற் தேவையை நிறை வேற்றும்கைப்பொம்மைகளானுர்கள் இரண் டாவதாக அமெரிக்க ஏகாதிபத்தியங்களின தும், ஜனநாயக விரோதிகளினதும் கையாட்களாகினுர்கள்.

சீக்கியத் தீவிரவாதிகள் ஒருபுறம் பயங் கரவாத நடவடிக்கைகளிலும், மறுபுறம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் பாகிஸ் தானது பக்கமும் சேர்ந்து செயற்பட்டதன் மூலம் இந்திய மக்களின் அனுதாபத்தை யும், உலக முற்போக்காளரின் அனுதாபத் தையும் இழந்தார்கள். சீக்கியத் தீவிரவா திகளின் பயங்கரவாத நடவடிக்கைகள் இந் தியா முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தவேதான் தீனிபோடப்பட்டு வளர்த்த பிந்திரன்வாலேயை இராணுவத் தை அனுப்பி இந்திராகாந்தி முடிவுகட்டி ஞர். சீக்கியரின் நியாமான பிரச்சினைகள் பிழையான வழிகளால் முன்னெடுக்கப்பட் டதனுல் போராட்டம் பெரிதும் களங்கப் பட்டு இறுதியில் தீவிரவாதிகள் தோற்க டிக்கப்பட்டனர். அப்பாவிச் சீக்கிய இளை ஞர்கள் தம்மை உள்நாட்டு ரீதியாக இந் திராவின் பிற்போக்குந் தனத்துக்கும், சர் வதேச ரீதியாக அமெரிக்காவின் பிற்போக் குத்தனத்துக்கும் பகடைக்காய் ஆக்கித் தம்மைத் தாமே அழித்துக்கொண்டார்கள்.

இந்திராகாந்தி விளையாடிய அரசியற் சூது இறுதியில் இந்திராகாந்தியையே பலி கொண்டது. உள்நாட்டு ரீதியாகவும், சில அண்டை நாடுகள் பொறுத்தும் இந்திரா விடம் பிற்போக்கு குணும்சங்கள் இருந்த போதிலும் சர்வதேச ரீதியான இந்திரா முற்போக்கான பாத்திரத்தை ஓரளவு வகித் திருக்கின்றுர். எப்படியோ அப்பாவிச் சீக் கியரைப் படுபிற்போக்குத்தனமாக இந்தி ராகாந்தி கையாண்டுள்ளார். இந்திரா காந்தி சரியான முறையில் நடந்திருந்தால் சீக்கியர் தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைத்திருக்கமாட்டார்கள் இந்திய சுதந்தி ரப் போராட்டத்தில் சீக்கியரின் தியாகம் எண்ணற்கரியது. பாகிஸ்தான் பிரிவினைக் காலகட்டத்திலும், பிரிந்த பின்பும் ஐக்கி யப்பட்ட இந்தியா என்றும் தாம் இந்தி யர் என்ற உணர்வைப் பிரதிபலித்த மக் கள் சீக்கியர் என்பதையும் நாம் மனதிற் கொள்ளவேண்டும்.

இந்திராவின் மரணத்தின் பின்பு ராஜீவ் காந்தி 3/4பங்கு பெரும்பான்மைப் பலத் துடன் ஆட்சிக்கு வந்தார். எனவே அவரிற் குத் தாயாரைப் போல பாராளுமன்றக் கதிரைகளுக்காக அரசியற் சூதாட்டத்தில் ஈடுபடவேண்டிய தேவை இருக்கவில்லை எனவே தான் அவர் சீக்கியரின் பிரச்சினை யைச் சமாதானமாகத் தீர்க்கும் சமரசத் திற்குத் தயாரானுர் சண்டிகார் நகர் பஞ்சாப்பிற்கு உரியதென்றும், சுக்னு ஏரி பஞ்சாப்பிற்கு உரியதென்றும், பஞ்சாப்பிற் குள் உள்ள ஹிந்தி மொழி பேசும் சில பகுதிகள் ஹரியானுவுடன் இணையுமென் றும் ஒப்புக்கொண்டார். மேலும் இனக்கல வரத்தால் பாதிக்கப்பட்ட சீக்கியரிற்கு நஷ்டஈடு, இராணுவ சேவையிலிருந்து வெளியேறிய சீக்கியருக்குப் புனர்வாழ்வு போன்ற சில திட்டங்கள் ஒப்பந்தத்தில் அடங்கின. இவ்வாறுன அம்சங்கள் அடித் துவிட்டுப் புண்ணுக்கு மருந்து போடும் அம்சங்களே தவிர புதிதாக அவர்களுக்கு

(தொடர்ச்சி 28-ம் பக்கம் பார்க்க)

# கலை, இலக்கியத்தின் கடமை

## ஓர் அறிமுகம்

**கலை, இலக்கியம்** மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும். நிகழ்ந்து கொண்டிருக்கும் வாழ்வில் நிலவும் குப்பை கூளங்களை களைந்து, சுதந்திரமான முன்னேற்றம் மிக்க வாழ்வை உருவாக்குவதற்கு கலை இலக்கியம் ஓர் முக்கிய சாதனமாக செயற்பட வேண்டும். கலை, இலக்கியம் மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமாயின் மக்களின் பிரச்சினைகளை அவை பிரதிபலிக்க வேண்டும். மக்கள் மீது இழைக்கப்படும் அநியாயங்களையும், அக்கிரமங்களையும் படம் பிடித்துக்காட்ட வேண்டும். மக்களின் எண்ண உணர்வுகளையும், அபிலாசைகளையும் வெளிப்படுத்த வேண்டும். மக்கள் மத்தியில் பகுதி பகுதியாக நிலவும் இன்ப துன்பங்களை கலை, இலக்கியம் சகல மக்களிற்கும் பொதுவானதாகப் பரிமாற்ற வேண்டும். அதாவது மக்கள் மத்தியில் காணப்படும் இன்ப, துன்பங்களை அனைவரிடையிலும் பகிர்ந்து கொள்ளவேண்டும். ஒரு மனிதனிடம் ஏற்படும் இன்பம், துன்பம், தெளிவு, விழிப்பு போன்றவற்றை இன்னொருவனுக்குப் பரிமாறுகின்ற தொழில் தான் கலை; இலக்கியம். அதாவது மனிதனின் நிலையை மற்றைய மனிதனுக்கு உணர்த்துவதற்காகக் கையாளப்படும் ஊடகம் தான் கலை,இலக்கியம். ஒருமனிதனின் உணர்வை வெளிப்படுத்துவதற்காக இன்னொரு மனிதனின் உணர்வைத் தூண்டுகின்ற வித்தைதான் கலை, இலக்கியம்.

இன்ப துன்பங்களை பகிர்ந்து கொள்ளுதல் எனும்போது மக்கள் மத்தியில் அநியாயங்களையும், அக்கிரமங்களையும் இழைப்பதன் மூலம் இன்பத்தை அனுபவிக்கிறார்களே அவர்களின் இன்பத்தைப் பகிர்ந்து கொள்ளல் என அர்த்தப்படாது. மாறாக அந்தக் கூட்டம் அனுபவிக்கும் இன்பத்தைக் கண்டு மக்கள் சினங்கொள்ளக் கூடிய வகையில் அதனை சித்தரிக்க வேண்டும். மக்களை, குறித்த இலட்சியத்தின் பொருட்டு ஒருங்கிணைக்கும் ஓர் நூலாக, சமூகத்தில் இழைக்கப்படும் தீமைகளை, அக்கிரமங்களை வீழ்த்துவதற்கான ஓர் ஆயுதமாக கலை, இலக்கியம் விளங்க வேண்டும்.

சமூக நடத்தைகள் மனிதமுளையில் பிரதிபலிப்பதன் விளைவு கலை, இலக்கியமாக உருப்பெறுகின்றது மக்களிலிருந்து, மக்களின் வாழ்விலிருந்து கலை, இலக்கியம் ஓர்வெளிச்சமாக நிற்க மக்கள் அவ் வெளிச்சத்தை நோக்கி, அவ் வெளிச்சத்தின் துணையோடு மேலும் முன்னே செல்வார்கள். வெறும் கண்ணீரை மட்டும் சித்தரிக்காமல், கண்ணீரின் ஊற்றுக்களையும் சித்தரிக்க வேண்டும். ஊற்றை சித்தரிப்பதன் மூலம், அதன் காரணகர்த்தாக்களை சித்தரிப்பதன் மூலம் அக் கண்ணீரை அடைப்பதற்கான முதலாவது பாதை திறக்கப்படுகின்றது. கண்ணீரை அடைப்பது மட்டுமல்ல கடமை; அக் கண்ணீரைக் கடந்து இன்பத்தின் ஊற்றையும் திறக்க வேண்டும். கண்ணீர், கண்ணீரின் ஊற்று. இன்பம், இன்பத்தின் ஊற்று இவற்றின் பொருட்டு மக்களை விறல் மிக்கவர்களாக மாற்றுதல் ஆகிய பரிமானங்கள் ஓர் கலை இலக்கியப் படைப்பின் அந்தரங்க ஆத்மாவாக இருக்க வேண்டும் பொதுவில் அரசியல் தீர்மானங்களுடன், அரசியல் செயற்பாட்டுடன் கலை, இலக்கியப் படைப்புகள் இணைக்கப்படாதவரை அவை ஓர் உயிரற்ற படைப்புக்களேயாகும். இவ் உயிரற்ற படைப்புகள் ஒரு புறம் வெறும் ஒப்பாரியாகவும், மறுபுறம் ஓர் கும்மாளமாகவுமே இருப்பதுண்டு.

பொதுவில் கலை, இலக்கியம் நீறு பூத்த நெருப்பாய் இருக்கும் விடயங்களின் நீறை தட்டி நெருப்பின் சுயரூபத்தை வெளியே காட்டவேண்டும். அக்கிரமகாரர்களின் பொய், புளுகு, மாயாஜாலங்கள் என்பன இலக்கியத் தீச்சுவாலையின் முன்பு சூரியனைக் கண்டுருகும் பனிமலைபோல கரைந்துருக வேண்டும். கள்ளைவேறு, பாலைவேறாக, கொலைஞனின் கத்தியை வேறு, வைத்தியனின் கத்தியை வேறாக, நெல்லை வேறு, உமியை வேறாகத் தரம்பிரித்துக் காட்டுவது கலை, இலக்கியத்தின் பணியாகும். சமூக முன்னேற்றத்திற்கான அறிவைச் சமூக உணர்வாக மாற்றவேண்டும். எனவே அறிவை உணர்வாக மாற்றுவதற்கான உணர்ச்சி வடிவமே கலை, இலக்கியமாகும்.

# தளிர் | அவதானிகள் பார்வையில்

**இலங்கை மீது இந்திய அரசு பொருளாதாரத் தடைகளை மேற்கொள்ளுமா?**

இந்திய அரசு எதிர்பார்ப்பது போல இலங்கை அரசால் இனப்பிரச்சினை சம்பந்தமாகச் சரியான சமரசத்திட்டத்தை முன்வைக்காத போது இந்திய அரசு இலங்கை அரசைப் பணியவைக்கும் நோக்குடன் இலங்கைமீது பொருளாதார நெருக்கடிகள் எற்படக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.

இலங்கையின் தேசிய வருமானத்தில் 60% தேயிலை ஏற்றுமதியால் கிடைப்பதாகும். தற்போது இலங்கைத் தேயிலையின் தரத்திற்குச் சற்றும் குறையாத விதத்தில் இந்தியாவின் அசாம் மாநிலத்தில் உற்பத்தியாகும் தேயிலை காணப்படுகின்றது. உலக சந்தையில் அசாம் தேயிலையின் விலையை இந்தியா குறைக்கும் பட்சத்தில் இலங்கைத் தேயிலையின் சந்தை வீழ்ச்சியடைந்து விடும். செப்ரம்பர் மாத முற்பகுதியில் இந்தியா தனது தேயிலைவிலையை சற்று குறைத்திருப்பது இலங்கை அரசுக்கு ஓர் முன் எச்சரிக்கையாக அமைந்துள்ளதாகக் கொள்ள இடமுண்டு.

இந்திய-அமெரிக்க உறவு ராஜீவின் தலைமையின்கீழ் சற்று சுமுகமடைந்து வருவதனாலும், குறிப்பாக பிரான்ஸ், கனடா போன்ற மேற்குலக நாடுகள் இந்தியாவின் வேண்டுகோளிற்குச் செவி சாய்க்கக் கூடியதாய் இருப்பதனாலும் இந்நாடுகள் இலங்கை அரசுக்கு வழங்கும் நிதி உதவியை இந்தியாவால் கட்டுப்படுத்தமுடியும். மதுறு ஓயா திட்டத்திற்கு கனடா நிதி உதவியளிப்பது எல்லோருக்கும் தெரிந்ததே. கனடா தனது இலங்கைக்கான நிதி உதவிகளை இலங்கை அரசு பாதுகாப்புச் செலவினங்களுக்காய் பயன்படுத்தக்கூடாதென்றும், மேலும் தமது நிதியுதவி இலங்கையின் ஏனைய சிறுபான்மை மக்களுக்கும் பயன்படும் பட்சத்திற்தான் தமது நாடு நிதி உதவியளிக்கமுடியுமென்றும் கனடா செப்ரெம்பர் முதல்வாரத்திற் குறிப்பிட்டிருப்பது இலங்கை அரசின் சர்வதேச ரீதியான பொருளாதாரத் தடை முன்தீபு தோற்றம் பெற்றிருக்கிறதென்றே கூறத்தோன்றுகின்றது.

இலங்கையை பணியவைப்பதற்கான அடுத்தகட்ட இராஜதந்திரமாக இந்தியா இந்தவழியைக் கையாண்டால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

## சீக்கியர் பிரச்...

( 23 - ம் பக்கத் தொடர்ச்சி )

ஏதோ உதவிசெய்த அம்சங்களல்ல. மொத்தத்தில் 1966-ஆம் ஆண்டு ஒப்புக்கொள்ளப்பட்ட சண்டிகார் நகரை, 1985-ஆம் ஆண்டு ராஜீவ்காந்தி அமுற்படுத்த ஒப்புக்கொண்டமைதான் இதிலுள்ள முக்கியத்துவமே தவிர வேறில்லை. சுருக்கமாகச் சொல்வதாயின் இந்தியாவின் சிறுபான்மையினராகிய சீக்கியர்கள் பல்வேறு சக்திகளினதும் சொந்த அரசியல் தேவைக்காக கேவலமாகக் கையாளப்பட்டுள்ளனர் என்பதைத் தவிர வேறில்லை.

சீக்கியரின் பிழையான போராட்ட முறையும், பிழையான கூட்டுச்சேர்வும் எதிர்க்கப்படவேண்டும். ஆனால் சீக்கியரின் நியாயமான பிரச்சினைகளை அங்கீகரித்து அதற்கு ஆதரவாக நிற்கவேண்டும். மதத்தின் பெயராலோ, மொழியின் பெயராலோ, சிறுபான்மையினர் என்பதாலோ உலகின் எந்தவொரு மூலையிலும் யாரும் ஒடுக்கப்படக்கூடாது.

தளிர் வளர்ந்து, கிளை பரப்பி
விடுதலை விருட்சம் தழைத்திட வாழ்த்துக்கள்

நண்பரின் அன்பளிப்பு

**விடிவிற்கு வழிகாட்டும்**
**தளிரின் சேவைக்கு வாழ்த்துக்கள் !**

ஓர் அன்பர்

To be or not to be.